குறைந்து விட்டன. எங்களுக்கு வேலை இல்லை, ஆகவே, நியாயமான விலையில் சிமெண்ட், மரம், இரும்பு ஆகியவைகள் கிடைக்கச்செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும், எங்களுக்குத் தக்க வகையில் வேலை கிடைக்கச் செய்யவேண்டும், அவர்கள் செய்கிற தொழில் ஆபத்தான தொழில் என்றும், அப்படி வேலை செய்து கொண்டு இருக்கிறபோது இறந்து விட்டால், அதற்கு அரசாங்கம் உதவி கொடுக்கவேண்டும் என்றும் கோரி போராட்டம் நடத்திக்கொண்டு இருக்கிறார்கள். அவர்களுடைய கோரிக்கைகளையும் அரசு பரிசீலித்து தகுந்த நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றுள்ள அரசின் போக்கு தெளிவில்லாத போக்காக இருக்கிறது. அப்படி தெளிவு இல்லாத காரணத்தால் தான் பல்வேறு சங்கடங்கள் தமிழ்நாட்டில் ஏற்பட்டு இருக்கின்றன என்பதை எடுத்துச்சொல்லி என்னுடைய கண்டனத்தைத் தெரிவித்து அமர்கிறேன். வணக்கம்.

*திரு. மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சியின் துணைத் தலைவர் பேராசிரியர் அவர்களால் முன்மொழியப்பட்டு, இந்த மன்றத்திலே உள்ள இந்திரா காங்கிரஸ் கட்சியினுடைய உறுப்பினர்களாலும், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய உறுப்பினர்களாலும் ஆதரிக்கப்பட்டு, இந்த மன்றத்திலுள்ள பல்வேறு கட்சியைச் சேர்ந்தவர்கள், ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் அது பற்றிய கருத்துக்களை எடுத்துக் கூறி இன்று விவாதத்தின் இறுதி நாளாக அமைந்துள்ள கண்டன தீர்மானத்தின்மீது என்னுடைய கருத்துக் களைச் சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

நான் இந்தக் கண்டன தீர்மானத்தில் பல குற்றச்சாட்டுகளை இந்த அரசின் மீது நல்ல விளக்கத்தோடும், ஆதாரங்களோடும் எடுத்து வைப்பது எதிர்க்கட்சிக்குள்ள உரிமை, கடமை என்கிற அளவில் முன் வைக்கிறேன்.

1977–78–ம் ஆண்டுக்கு ஒதுக்கப்பட்ட தொகையில் (சுமார் அல்லது சரியாகச் சொல்லப் போனால் ரூ. 199 கோடியை சட்டச்சபையின் அங்கீகாரம் பெற்று இருந்தும் கூட செலவு செய்யப்பட வில்லை என்பதை Report of the Comptroller and Auditor General of India குறிப்பிட்டு இருப்பதை நான் இங்கே கோடிட்டு காட்டாமல் இருக்க இயலாது.

அதிலே எவ்வளவு முக்கியமான இனங்கள் செலவு செய்யப் படாமல், இன்றியமையாத இனங்கள் செலவு செய்யப்படாமல், ஒதுக்கப்பட்ட பணம் அப்படியே இருக்கிறது. 1977–78–ம் ஆண்டில் என்பதற்காக ஒரு சில எடுத்துக்காட்டுகளை மாத்திரம் நான் முன் வைக்க விரும்புகிறேன்.

1979 நவம்பர் 3] [திரு. மு. கருணாநிதி]

சேரிப் பகுதிகளை—அரிசன காலனிகளை—சீரமைப்பதற்காக தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திற்கு ஒதுக்கப்பட்ட தொகை 1 கோடி ரூபாய். அதிலே ஒரு சல்லிக்காசு கூட செலவு செய்யப் படவில்லை என்பது வருந்தத்தக்க ஒன்றாகும்.

கிருஷ்ணா தண்ணீரை சென்னைக்குக் கொண்டுவரும் திட்டத்தை ஆய்வு செய்ய ஒதுக்கப்பட்ட தொகை 50 இலட்சம் ரூபாயில் எதுவுமே செலவு செய்யப்படவில்லை என்பது வருந்தத்தக்கதும் கண்டிக்கத்தக்கதும் ஆகும்.

நீர்ப்பாசன வளர்ச்சிக்காக மூலதனச் செலவாக இந்த அவை அங்கீகரித்த தொகையான சுமார் 4 கோடியே 54 இலட்சம் ரூபாயில் செலவு செய்யப்படாத தொகை சுமார் 3 கோடியே 92 இலட்சம் ரூபாயாகும்.

சென்னையிலே முக்கியமான பிரச்சனையாக இருக்கின்ற குடிநீர்ப் பிரச்சனை—அதற்காக இந்த மாமன்றம் ஒதுக்கிய தொகை 1 கோடியே 84 இலட்சம் ரூபாய். ஆனால் செலவு செய்யப்படாத தொகை அந்த 1 கோடியே 84 இலட்சத்தில் 1 கோடியே 30 இலட்சம். அதாவது 71 சதவீதம் செலவு செய்யப்படவில்லை என்பது கண்டனத்திற்குரியது.

பின்தங்கிய சமுதாய மக்களுக்காக இந்த மாமன்றம் அங்கீகரித்த தொகை 6 கோடியே 42 இலட்சம் ரூபாயில் செலவு செய்யப்பட்டது 5 கோடியே 69 இலட்சம் தான். செலவு செய்யப்படாத தொகை 72.87 இலட்சம். பின்தங்கிய மக்களுக்கு இன்னும் அதிகமாக செலவு செய்யப்பட வேண்டும் என்கிற தேவை இருக்கும்போது, அதிலே 72 இலட்ச ரூபாயை செலவிடாமல் ஒதுக்கியது வருந்தத்தக்க ஒன்றாகும்.

பொதுச் சுகாதாரத்தில். 'சானிட்டரி', 'வாட்டர் சப்ளை' போன்ற மக்களுடைய அடிப்படைத் தேவைகளுக்காக மூலதன ஒதுக்கீடாக இந்த மாமன்றம் அங்கீகரித்த தொகை 73 இலட்சம். அதிலே செலவு செய்யப்பட்டது 6 இலட்சம் தான். ஆக, 90 சதவீதம் செலவு செய்யப்படவில்லை.

விவசாயத்திற்காக இந்த மாமன்றம் அங்கீகரித்த மூலதனச் செலவு 12 கோடியே 34 இலட்சம் ரூபாய். செலவு செய்த தொகை 1 கோடியே 92 இலட்சம் ரூபாய்தான். செலவு செய்யப் படாத தொகை 10 கோடியே 42 இலட்சம். அதாவது 84 சதவீதத்தை செலவு செய்யவில்லை.

கிராமப்புற சாலைகளும் பாலங்களும் அமைக்கப்பட்டு வருவதாக உறுப்பினர்கள் எல்லாம், ஆளும் கட்சியைச் சேர்ந்த வர்கள், ஆளும் கட்சிக்கு ஆதரவானவர்கள் எல்லாம் பெருமை

யோடு சொன்னார்கள். உண்மை என்னவென்று பார்த்தால் அதற்காக என்று இந்த மாமன்றம் அங்கீகரித்த தொகை 8 கோடி ரூபாய். அதிலே இன்னும் செலவு செய்யப்படாமல் இருப்பது, சுமார் 3 கோடி ரூபாய் என்பதை வருத்தத்தோடு நான் இங்கே தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஒவ்வொரு மாநிலமும் இந்திய அரசிடத்திலே திட்டத்திற்காக அதிகத் தொகை ஒதுக்க வேண்டுமென்று கூக்குரல் போட்டு, போராடி, பிச்சை எடுக்கின்ற நிலைமைக்குக்கூட ஆளாகி, அவைகளைத் தங்களுடைய மாநிலத் திட்டங்களுக்காக செலவிட்டு வருகிற இந்த நேரத்தில் இங்கே மாமன்றத்தினுடைய அனுமதி பெற்று, ஒதுக்கப்பட்ட தொகையை செலவழிக்கப் படாமல் வைத்திருப்பது மிக மிக வேடிக்கையானது, வேதனை அளிக்கக்கூடியது என்பதை நான் சுட்டிக்காட்ட கடமைப் பட்டிருக்கிறேன்.

ஆனால். இப்படிப்பட்டத் திட்டங்கள் அல்லது ஏற்கெனவே நிறைவேற்றப்பட்ட திட்டங்களுடைய பராமரிப்புகள்-இவைகள் எதுவுமே நாட்டில் நடைபெறாமல், அதே நேரத்திலே இன்றைக்கு தமிழகத்திலே இருக்கிற ஒரே ஒரு ஜனநாயக அமைப்பு இந்த சட்ட மன்றம்தான் என்கிற நிலை ஏற்பட்டு, மற்ற மக்கள் பிரதிநிதிகள் இருக்கின்ற எல்லா மன்றங்களும் நிறுவனங்களும் கலைக்கப்பட்டுவிட்ட ஒரு சூழ்நிலையை நாம் காண்கிறோம். அவைகளுக்கு எல்லாம் இப்போது அமைப் பாளர்களை நியமிப்பதைப்போல நியமனங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

ஏதோ பெரிய பெரிய சட்டங்கள் எல்லாம், புரட்சிகரமான சட்டங்கள் எல்லாம் கூட்டுறவுத் துறையில் வருவதாக எடுத்துச் சொல்லப்பட்டு, ஆனால் மாமன்றம் கூடி இருக்கிற நேரத்திலேயே பத்திரிகையிலே பார்த்து நாம் சில செய்திகளைத் தெரிந்து கொள்கிறோம்.

இன்னின்னார், இன்னின்ன வங்கிகளுக்கு இன்னின்ன நிறுவனங்களுக்கு நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். இன்ன எம்.எல்.ஏ. அல்லது இன்ன அமைப்பாளர் என்ற அளவுக்கு செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன.

நம்முடைய நண்பர் மாரிமுத்து அவர்கள் பேசும்போது ஊராட்சி மன்றங்கள் கலைக்கப்பட்டதைப் பற்றிச் சுட்டிக் காட்டினார்கள். ஊராட்சி மன்றங்கள் ஒன்றல்ல; இரண்டல்ல. ஏதோ மதுரை மாநகராட்சி மன்றத்தினுடைய ஆயுளை நீடிக்காமல் இருந்துவிடவில்லையா? சென்னை மாநகராட்சி மன்றத்தை கலைத்து விடவில்லையா என்று ஒன்றிரண்டு

1979 நவம்பர் 3] [திரு. மு. கருணாநிதி]

உதாரணங்களைக் காட்டி பேசிய ஆளும் கட்சியினுடைய அருமை நண்பர்களுக்கு எடுத்துக்காட்ட நான் கடமைபட்டிருப்பதெல்லாம் ஒன்றல்ல, இரண்டல்ல; 12,000 ஊராட்சி மன்றங்கள் ஒரே உத்தரவின் மூலம் கலைக்கப்பட்டிருக்கின்றன. இந்த உத்தரவில் ஏற்பட்டிருக்கிற சில முரண்பாடுகளை நான் இங்கே எடுத்துக் காட்டுவது என்னுடைய கடமையாகும்.

[முற்பகல் 10-50]

ஊராட்சி மன்றத் தலைவர்களுக்கு செக் புஸ்தகங்களில் கையெழுத்துப் போடுகிற உரிமை உண்டு. முதலமைச்சர் அவர்களுக்கு கூட கிடையாது செக் புத்தகத்தில் கையெழுத்துப் போடும் உரிமை. வேறு எந்த அமைப்புகளிலோகூட அங்குள்ள தலைவர்களுக்கு செக் புத்தகத்தில் கையெழுத்துப் போடும் உரிமை கிடையாது. ஆனால் ஊராட்சி மன்றத் தலைவருக்கு உண்டு. ஊராட்சி ஒன்றியம் கலைக்கப்பட்ட பிறகு, ஒரு சிற்றூரில் 50 ரூபாய்க்கு ஏதாவது செலவிட வேண்டும் என்றால், அந்தக் செக்கை வழங்கக் கூடிய உரிமை, செக்கில் கையெழுத்து இடக்கூடிய உரிமை பிளாக் டெவலப்மெண்ட் ஆபிசருக்கு வருகிறது. ஒரு 50 ரூபாய்க்கு பல்பு வாங்க வேண்டும், அல்லது அந்த ஊருக்கு வேறு ஏதாவது பொருள் வாங்க வேண்டும் என்றால், அந்த 50 ரூபாய்க்கான காசோலையில் பிளாக் டெவலப் மெண்ட் ஆபிசர்' கையெழுத்து இட வேண்டும். அதை தணிக்கை செய்வது யார் என்று பார்த்தால் நிர்வாகத்திலே எவ்வளவு முரண்பாடு என்று தெரிகிறது. அதை எக்ஸ்டென்ஷன் ஆபிசர் ஆப் பஞ்சாயத்து, இ.ஓ.பி.—என்று சொல்லப்படுபவர் தணிக்கை செய்கிறார். அவர் பிளாக் டெவலப்மெண்ட் ஆபிசருக்கு கீழே உள்ள ஒரு அதிகாரி. பிளாக் டெவலப்மெண்ட் ஆபிசர் கொடுத்த ஒரு காசோலையை, அதை அந்த வகைக்குச் செலவிடலாமா என்று தணிக்கை செய்பவர் அவர் கீழே உள்ள அதிகாரி ஒருவர். அந்த அளவுக்கு நிர்வாகம் சீர் குலைந்து இருக்கிறது. அதற்கு இது ஒரு சான்று ஆகும். ஜனநாயக அமைப்புகள் கலைக்கப் பட்டுள்ள இந்தச் சூழ்நிலையில் பெரிய திட்டங்களை நிறை வேற்றாவிட்டாலும், தேர்தல் நேரத்திலே ஆங்காங்கு புயல் வெள்ளம் துயர் துடைப்பு விழாக்களை நடத்தி புடவை, வேட்டி களை வழங்குகிற விழாக்களை நடத்திவிட்டால் மக்களின் மதிப்பை கவர்ந்து விடலாம் என்று இருக்கக்கூடிய முயற்சியில் இறங்குகிறார்களே தவிர எதுவும் உருப்படியாக செய்வதில்லை. நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அடிக்கடி இப்படி தேர்தல் ஸ்டண்டுகள் நடத்துகிறார். சமீபத்தில் மதுரை மாநகரில் நமது முதலமைச்சர் அவர்கள், திருப்பூர் குமரன் அவர்களுடைய துணைவியார் இராமாயி அவர்கள் அங்கே நடைபெறுகிற விழாவிற்கு வருகை தந்திருந்தபோதோ, அல்லது வரவழைக்கப் பட்டாரோ, அதைப்பற்றி நான் பேச விரும்பவில்லை, அவர்களை மேடைக்கு அழைத்து அந்த விழாவிலேயே அவர்களுக்கு அரசின்

சார்பில் 10,000 ரூபாய் வழங்கப்படும் என்று அறிவித்தார், அது தவிர மாதந்தோறும் மானியமும் வழங்கப்படும் என்று திடீர் என்று முதலமைச்சர் அவர்கள் அறிவித்து விட்டார்....

உண்மை நிலை என்னவென்றால், திருப்பூரிலிருந்து, இதே இராமாயி அவர்களின் சார்பாக திரு. பி. இராமசாமி என்பவர் 3-7-78ல் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு கடிதம் எழுதியிருக்கிறார். அதிலே அவர் ''காமராஜ் அவர்களின் சகோதரி அவர்களுக்கு பென்ஷன் கொடுப்பதுபோல, திருப்பூர் தியாகி கொடி காத்த குமரன் அவர்களின் துணைவியார் திருமதி கே. இராமாயி அவர்களுக்கும் மாதம் 500 ரூபாய் தந்து உதவ வேண்டும் என்று முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். இது பற்றி தங்கள் அறிவிப்பை எங்களுக்குத் தர வேண்டும் என்று மீண்டும் கேட்டுக் கொள்கிறேன்''. இப்படி 3-7-78ல் ஒரு கடிதம் முதலமைச்சருக்கு வருகிறது. முதலமைச்சரின் பார்வைக்கு சென்றுதான் பொதுத் துறைக்கு, திரு. யு.எஸ் நடராஜன், ஐ. ஏ. எஸ், அரசு துணைச்செயலாளர் அவர்களுக்கு செல்கிறது. அங்கிருந்து ஒரு கடிதம் அந்த இராமசாமி அவர்களுக்குச் செல்கிறது, என்னவென்று, ''திருப்பூர் குமரன் அவர்களுடைய மனைவியார் ஏற்கெனவே மத்திய மாநில அரசுகளின் மானியங்களைப் பெற்று வருகிறார். அதை மேலும் உயர்த்தி கொடுப்பதற்கு இல்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்''. இப்படி எழுதியது 1978ம் ஆண்டில் மத்திய–மாநில மானியத்தை ஏற்கெனவே பெற்று வருகிறார், அதை மேலும் உயர்த்தி கொடுப்பதற்கு இல்லை என்று 16-10-78லே கண்டிப்பாகத் தெரிவித்துவிட்டு, ஒரு ஆண்டுக்குப் பிறகு அதே இராமாயிக்கு 10 ஆயிரம் ரூபாய் மானியம் தருகிறோம் என்று அறிவிக்கிறார். அந்த மானியம் இன்னும் வழங்கப்படவில்லை, அது வேறு விஷயம், ஆனால் இது எப்படிப்பட்ட தேர்தல் ஸ்டண்ட் என்பது புரியும். சென்ற ஆண்டு இறுதியில் கண்டிப்பாக மறுத்துவிட்டு, இந்த ஆண்டு திடீர் என்று 10,000 ரூபாய் வழங்குவதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது என்பதை எண்ணிப் பார்த்தால் புரிந்து கொள்ள முடியும்.

நான் சில குற்றச்சாட்டுக்களை இங்கே வைப்பதாகச் சொன்னேன். அந்தக் குற்றச்சாட்டுகள் என்ன என்பதை, அந்தக் கருத்துக்களை எடுத்துச் சொல்வதற்கு முற்படுகிறேன்.

பேசிய ஆளும் கட்சி உறுப்பினர்களில் சிலர் மருத்துவக் கல்லூரி தேர்வில் எந்தவிதமான தவறுகளும் இந்த ஆட்சியில் நடைபெறுவதேயில்லை என்று சத்தியம் செய்வதைப்போல் பேசினார்கள். ஆனால் மிகமிகப் பெரிய தவறுகள் மருத்துவக் கல்லூரி அட்மிஷன் விஷயமாகவும், அந்த அட்மிஷன் முறையிலே பட்டியல்களைத் தயாரித்து வெளியிடுவது விஷயமாகவும்

1979 நவம்பர் 3] [திரு. மு. கருணாநிதி]

இன்றைக்கு நாட்டு மக்களுக்கு தெரிய வந்திருக்கின்றன என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அரசாங்கம் ஒரு ஜீ. ஒ. போட்டு மருத்துவக் கல்லூரி மாணவர்களுடைய தேர்வுக்கான குழுவை நியமிக்கிறது. இந்த ஜீ.ஒ. வினுடைய 8-வது பிரிவு மிகத் தெளிவாகச் சொல்கிறது.

The Secretary, Co-ordination Committee should send to Government, addressed to the Secretary to Government, TamilNadu Health and Family Planning, in name cover, duly sealed, the list of selected, for approval of Government. before publication.

வெளியிடுவதற்கு முன்பு அந்தப் பட்டியலை கவர்ன்மென்ட் அப்ரூவலுக்கு, அரசாங்கத்தினுடைய ஒப்புதலுக்காக அனுப்ப வேண்டுமென்று தெளிவாக அந்த ஜீ. ஒ. வின் 8-வது பிரிவு எடுத்துக் காட்டுகிறது. ஆனால் என்ன நடைபெற்றிருக்கிறது என்றால் இப்போது அவற்றை எந்த ஜீ.ஒ.வும் வெளியிடப்படாமல் 'கோ ஆர்டினேஷன் கமிட்டிச்', செயலாளரே தானாகவே அந்தப் பட்டியலை வெளியிட்டு இருக்கிறார். அரசாங்கத்தின் விதிப்படி செயலாளர் அந்தப் பட்டியலைப் பெற்று அதிலே ஒரு 'நோட்' எழுதி அனுப்புவார்கள். அதில் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கையெழுத்து இட்டு முதல் அமைச்சருக்கு அனுப்ப வேண்டும். ஆனால் இந்த ஆண்டு அப்படி நடைபெற்றதா என்றால் நடைபெறவில்லை. செயலாளருடைய குறிப்பும் கிடையாது. மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் வெறும் கையெழுத்து மாத்திரம் அதிலே போட்டிருக்கிறார்கள். அதற்கு மேல். ஒரு குறிப்பிட்ட அளவிற்கு மேல் மார்க் வாங்கியவர்கள் பட்டியல் ஒன்றை அனுப்பியிருக்கிறார்கள். அதில் முதல் அமைச்சர் அவர்கள் டிக் பண்ணியிருக்கிறார்கள். தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் பட்டியல் செப்டம்பர் 12-ம் தேதி வெளியாகிறது. மொத்தம் 1015 மாணவர்கள்தான் சேர்க்கப்படலாம் என்று அரசாங்கத்தினுடைய ஜீ.ஒ. கூறுகிறது. அப்படித்தான் ப்ராஸ்பெக்ட்ஸிலும் இருக்கிறது. 1015 மாணவர்கள்தான் சேர்க்கப்படலாம் என்று. ஆனால் திடீரென்று அந்த எண்ணிக்கை உயர்த்தப்பட்டிருக்கிறது. அதற்குரிய அனுமதிகளைப்பெற வேண்டிய இடங்களில் உரிய நேரத்தில் பெற்றார்களா இல்லையா என்பது வேறு விவகாரம். ஆனால் நான் இங்கே ஒரு மிக முக்கியமான விஷயத்தைக் குறிப்பிட விரும்புகிறேன். பட்டியல் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரிடத்தில் காட்டப்பட்டதாகவும், அவர் செப்டம்பர் 9-ம் தேதி அன்று அதிலே கையெழுத்து இட்டதாகவும் அதுபற்றி ஒரு பக்கம் விசாரணை நடைபெறுகிற இடத்தில் எடுத்துக்காட்டப் பட்டு விசாரித்தவர்கள் மேலும் சில விவரங்களைக் கேட்டதற்குப் பிறகு மறுநாள் அபிடவிட் தாக்கல் செய்கிற நேரத்தில் 9-ம் தேதிக்குப் பதிலாக 8-ம் தேதி என்று அதிலே குறிப்பிடப்பட்டு முதலில் கொடுக்கப்பட்ட அபிடவிட்டை விசாரித்தவர்கள்

பார்க்கிற நேரத்தில் அதிலே 8-ம் தேதி என்று போடப்பட்டிருந்து அந்தத் தேதியை மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சரோ அல்லது செயலாளர்களோ அதை மாற்றி அந்தத் தேதியை 9-ம் தேதி என்று திருத்தியிருக்கிறார்கள். இது எவ்வளவு பெரிய, ஆங்கிலத்தில் சொல்வதானால் 'ப்ராட்' என்பதை எண்ணிப் பார்த்திட வேண்டும். செப்டம்பர் 12-ம் தேதி மருத்துவக் கல்லூரி மாணவர்கள் யார் யார் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள் என்கிற பட்டியல் வெளியாகி விடுகிறது. அதற்குப் பிறகு நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் ஒரு உத்தரவு போடுகிறார்கள். தமிழில் அந்த உத்தரவு போடப்பட்டிருக்கிறது. எப்போது தெரியுமா? செப்டம்பர் 12-ம் தேதி மருத்துவக் கல்லூரி மாணவர்களுடைய பட்டியல் வெளியிடப்பட்ட பிறகு 6-10-1979, அடுத்த மாதம் ஒரு உத்தரவு பிறக்கிறது. என்ன அந்த உத்தரவு. அந்த உத்தரவின்படி கலப்புத் திருமணம் செய்து கொண்டவர்களின் குழந்தைகளுக்கு 6 இடங்கள். அமெரிக்க ஐக்கிய நாட்டிலிருந்து வரும் தமிழ் மாணவர்களுக்கும், மாணவியருக்கும் எந்த மதத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் 6 இடங்கள் விளையாட்டுச் சாதனைகளை ஏற்படுத்திய மாணவ மாணவியருக்கு மூன்று இடங்கள், ஆக, ஆறு ப்ளஸ் ஆறு ப்ளஸ் மூன்று 15 இடங்கள்.

(முற்பகல் 11-00)

1015 இடங்கள் என்று அறிவிக்கப்பட்டு, அதில் தேர்வு எழுதி அல்லது இன்டர்வியுக்கு மாணவர்கள் வந்து அந்த பட்டியல் செலக்ஷன் கமிட்டியால் நிறைவு செய்யப்பட்டு அந்தப்பட்டியல் செப்டம்பர் மாதம் வெளியிட்ட பிறகு 12-9-79-ல் வெளியிட்ட பிறகு 6-10-79 அன்று ஒரு உத்தரவு வருகிறது. அந்த 6-10-79 உத்தரவில் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் குறிப்பு எழுதுகிறார், முதலமைச்சரும் குறிப்பு எழுதுகிறார். அந்த உத்தரவு வருவதற்கு முன்பு இப்படிப்பட்ட ஒரு அருமையான கருத்தை அதாவது விளையாட்டுப் போட்டிகளில் நல்ல திறமையாக இருப்பவர்களுக்கு 3 இடங்கள், ஒதுக்க வேண்டும். அமெரிக்க ஐக்கிய நாடுகளில் வாழும் தமிழ் மாணவர்களுக்கு ஆறு இடங்கள் ஒதுக்க வேண்டும், கலப்புத் திருமணம் செய்து கொண்டவர்களின் பிள்ளைகளுக்கு 6 இடங்கள் ஒதுக்க வேண்டும். இப்படி 15 இடங்கள் ஒதுக்க வேண்டும் என்கின்ற உத்தரவு அடுத்தமாதம் வெளிவருகிறது. இது சட்டத்திற்கு உட்பட்டதா, நியாயம் நெறிமுறைகளுக்கு ஏற்புடையதா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். இந்த 15 பேர்களுக்கு இடம் உண்டு என்பதும், அமெரிக்க ஐக்கிய நாடுகளில் உள்ள தமிழ் மாணவர்களுக்கு இடம் உண்டு என்பதும், கலப்புத் திருமணம் செய்து கொண்டவர்களின் வீட்டுப் பிள்ளைகளுக்கு இடம் உண்டு என்பதும், விளையாட்டுகளில் சாதனைப் புரிந்தவர்களுக்கு இடம் உண்டு என்பதும், 1015 பேர்களுக்கு இடம் என்று அப்போது அறிவிக்கப்பட்ட கால கட்டத்தில் தெரிவிக்கப்பட்டிருக்குமேயானால்,

விளம்பரப்படுத்தப்பட்டிருக்குமேயானால் இப்படிப்பட்டவர்களெல்லாம் அதில் போட்டியிடுவதற்கு அவர்களெல்லாம் வந்திருக்கக் கூடும்.

எனவே அது தடுக்கப்பட்டு 1,015 இடங்களும் பூர்த்தியான பிறகு முதலமைச்சர் இப்படிப்பட்ட உத்தரவை வெளியிடுகிறார். இப்படி சரித்திர பிரசித்தி வாய்ந்த மிக முக்கியமான கொள்கை குறிப்பு அடங்கிய இந்த பைலை ஜெயராமன் என்கின்ற பிரிவு அலுவலர். அவர்தான் இந்த பைலை அனுப்புகிறார். பிறகு சார்பு செயலாளர் தண்டாயுதபாணி 13-9-1979-ல் கையெழுத்திடுகிறார். பிறகு ராஜண்ணன், மக்கள் நல்வாழ்வு குடும்ப நலத்துறை துணை செயலாளர் கையெழுத்திடுகிறார். பிறகு முராரி செயலாளர் அவர் கையெழுத்திடுகிறார். 13-9-79-ல் கையெழுத்திடுகிறார். பிறகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் 27-9-79-ல் கையெழுத்திடுகிறார். பிறகு எம்.ஜி.ஆர். 3-10-79-ல் கையெழுத்திடுகிறார். இப்படி பைலைப் பார்த்தால், 13-9-79-ல் இது ஆரம்பித்ததாக தெரிகிறது. என்னிடத்தில் இருப்பது இந்த பைலுடைய 'போட்டோ ஸ்டட்' காப்பி. முதலமைச்சரும், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரும், மற்ற இலாகாவில் உள்ளவர்களும் கையெழுத்திட்டுள்ள பைலின் போட்டோ ஸ்டட் காப்பி என்னிடத்தில் இருக்கிறது. ஜெயராமன் என்பவர் 13-10-79-ல் கையெழுத்து போட்டதை 13-9-79 என்று திருத்தி, 13-10-79 என்பது 13-9-79 ஆக திருத்தப்பட்ட பிறகு, 13-9-79, 27-9-79, 29-9-79, 3-10-79 என்றெல்லாம்' அந்த பைலில் வந்து, அதில் கீழே குத்தப்பட வேண்டிய முதலமைச்சருடைய அலுவலகத்தின் முத்திரை மேலே அதாவது பிரிவு அலுவலர் என்று சொல்லப்படுகிற அந்த இடத்தில் முதலமைச்சர் அலுவலகத்திலுள்ள முத்திரை குத்தப்பட்டு இப்படிப்பட்ட ஒரு பைல் வருகிறது. நான் கேட்பதெல்லாம், இதிலே 13-10-79 என்பது 13-9-79 என்று திருத்தப்பட வேண்டிய காரணம் என்ன? அதைப்போலவே பட்டியலில் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் 9-ஆம் தேதி, செப்டம்பர் 9-ம் தேதி கையெழுத்திட்டதாக சொல்லப்பட்டு, பின்னால் விசாரணை மண்டபத்தில் 8-ம் தேதி என்று சொல்லிவிட்டு, பின்னால் 9 என்று திருத்தப்பட வேண்டிய காரணம் என்ன?

இவைகளுக்கு மேலாக 1,015 இடம் என்று மருத்துவக் கல்லூரி மாணவர்களுக்கு அட்மிஷன் என்று அறிவிக்கப்பட்ட கால கட்டத்தில் ஏன் இப்படிப்பட்ட, கலப்புத் திருமணம் செய்து கொண்டவர்களுடைய குடும்பங்களிலுள்ள பிள்ளைகள், அமெரிக்க ஐக்கிய நாட்டு தமிழர்களுடைய பிள்ளைகள், விளையாட்டுகளில் சாதனைகள் ஏற்படுத்தியவர்கள் இவர்களெல்லாம் சேர்க்கப்படுவர் என்று அறிவிக்கப்படவில்லை? தமிழர்கள் அமெரிக்க ஐக்கிய நாடுகளில் மாத்திரம்தான் இருக்கிறார்களா? இங்கிலாந்தில் இல்லையா? வேறு நாடுகளில்

கிடையாதா? ஆகவே இது அமெரிக்க ஐக்கிய நாட்டு தமிழர்களுக்கு அல்ல, இவைகள் எல்லாம் அமெரிக்க ஐக்கிய நாட்டு கோட்டாவா? அல்ல, அன்பர் மணியன்கோட்டாதான் என்று நாட்டில் எல்லோரும் பேசிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். (தி. மு. க. உறுப்பினர்கள் தரப்பிலிருந்து ஆரவாரம்......)

அடுத்தபடியாக, 8-6-79 அன்று தமிழக அரசு பொதுத் துறை ஒரு ரகசிய சுற்றறிக்கையை அரசாங்கத்தின் அனைத்து அலுவலகத்திற்கும் அனுப்பியிருக்கிறது. பொதுத் துறை என்பது அரசாங்கத்தில் மிகவும் ரகசியமான துறை. அந்தத்துறை இருக்கின்ற அறைக்கு பக்கத்தில் யாரையும் அனுமதிக்க மாட்டார்கள்.

அந்தத்துறை அனுப்பியுள்ள ரகசிய அறிக்கை அதில் தலைமைச்செயலாளருக்காக மாதவன் நம்பியார் என்ற அதிகாரி கையெழுத்திட்டிருக்கிறார். அந்த அறிக்கையினுடைய நோக்கம் என்ன? தாத்பரியம் என்ன என்பதை நான் படித்துக்காட்ட விரும்புகிறேன்....

It has since been brought to the notice of Government that a middle-aged person with a beard and calling himself 'Palani Baba' is frequenting government offices and is seeking to achieve his ends by posing himself as a close friend of the authorities at righer levels. He is said to talk English and secretly tape-hecording conversation with officials.

All the officers now in the Address Entry are requested to forbid the entry of the said 'Palani Baba' into Government offices. The officers are also cautioned against having any contact with the individual, All the officers are requested to maintain a close and sharp vigil over his activities and send a report to Government if he comes to notice. The Heads of Department are requested to bring these instructions to the notice of subordinate officers also for information and guidance. ....என்று கையெழுத்திட்டு அனுப்பியிருக்கிறார். தமிழிலே சொல்ல வேண்டுமானால், பழனி பாபா என்று தன்னை அழைத்துக் கொள்ளக்கூடிய, தாடி வைத்த, நடுத்தர வயதுடைய ஒருவர், தான் மேலதிகாரிகளின் நண்பர் என்று கூறிக்கொண்டு, அரசு அலுவலகங்களிலே வந்து, தன்னுடைய காரியங்களை சாதித்துக் கொள்வதாக அரசுக்குத் தெரிய வருகிறது. அதிகாரிகளிடத்தில் ஆங்கிலத்திலே பேசி, இரகசியமாக பேச்சுவார்த்தைகளை டேப் செய்து, பதிவு செய்தவாகத் தெரிகிறது. அரசு

அலுவலங்களிலே பழனி பாபா என்று சொல்லப்படுபவர் உள்ளே வராமல் தடுத்து நிறுத்தப்பட வேண்டும். இந்த தனிப்பட்ட நபருடன் அதிகாரிகள் தொடர்பு வைத்துக் கொள்ளக் கூடாது என்று அதிகாரிகள் எச்சரிக்கப்படுகிறார்கள். அனைத்து அதிகாரிகளின் கவனத்திற்கும் இதனை எச்சரிக்கையாக வைத்து, அவர்களுடைய கவனத்திற்கு கொண்டுவர வேண்டுமென்று இந்த அரசு கேட்டுக் கொள்ளப்படுகிறது. துறைத் தலைவர்கள் தங்கள் கீழ் பணியாற்றும் சார்பு பணியாளர்களுக்கும், இதைப் பற்றி தகுந்த அறிவுரை வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள் என்று இந்த சுற்றறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கிறது.

இந்த சுற்றறிக்கையிலே சொல்லப்படுகின்ற, பெரிய அதிகாரிகளுடைய நண்பர் என்று கூறிக் கொள்கின்ற இந்த நபர் யார்? அவரைப் பற்றி இதே மாமன்றத்தில், கடந்த ஆண்டு என்று கருதுகின்றேன்—பாபா என்று பெயரைக் குறிப்பிட்டு, அவர் மூலம் 40 இலட்சம் ரூபாய் கைமாறிய கதையை நான் எடுத்துச் சொன்னேன். அப்போது அதற்கு எந்தவிதமான பதிலையும் முதலமைச்சர் அவர்கள் இங்கே அளிக்கவில்லை என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இப்படி தனியாக சுற்றறிக்கை அனுப்பப்பட்ட பழனி பாபாவுடன் தொடர்புடைய அதிகாரிகள் யார் என்று இந்த அரசுக்குத் தெரியாதா? இதோ இந்தப் படத்தில் நம்முடைய ஐ.ஜி. பரமகுரு, அவர் துணைவியார், அவருக்குப் பக்கத்திலே பழனி பாபா நிற்கிறார். எப்படி நிற்கிறார்? பரம குருவின் தோளில் கைபோட்டு நின்று கொண்டிருக்கிறார். ஏதோ பெஸ்டிவலில் அல்லது ஏதோ வரவேற்பு நிகழ்ச்சியில் எடுக்கப்பட்ட படமென்று யாரும் கருதக் கூடாது. வீட்டிலே எடுக்கப்பட்ட படம். அதுவும், ஐ.ஜி. பரம குரு தோளிலே கையைப் போட்டுக் கொண்டு, பழனி பாபா பரவசத்தோடு இருக்கும் படம் இது.

ஐ.ஜி. மாத்திரமல்ல. சில முஸ்லீம் பிரமுகர்களை சந்திக்கின்ற போது, பழனி பாபாவுடன் இருப்பது யார் என்று பார்த்தால், நம்முடைய மாண்புமிகு அமைச்சர் ராஜா முகமது அவர்கள். பழனி பாபா அவர்களோடு அமைச்சர் நின்று கொண்டிருக்கிறார். இதுவும் எங்கேயோ விசேஷத்திலோ, வைபவத்திலோ எடுக்கப்பட்ட படம் அல்ல. சில முஸ்லீம் பிரமுகர்களோடு பழனி பாபா நம்முடைய மாண்புமிகு அமைச்சர் ராஜா முகமது அவர்களைச் சந்தித்து பேசிய நேரத்திலே எடுக்கப்பட்ட படம்.

அது மாத்திரமல்ல. இன்னொரு படம். நம்முடைய முதலமைச்சர் அமர்ந்திருக்கிறார். முதலமைச்சருக்கு நேராக பழனி பாபா எப்படி உட்கார்ந்திருக்கிறார், பார்க்க வேண்டும்.

பக்கத்திலே சரிசமானமாக உட்கார்ந்திருக்கிறார் என்று சொல்ல முடியாது. நம்முடைய முதலமைச்சர் மேலே பாய்ந்து விழுவது போல், அவருடைய உதடு வரையில் கையை நீட்டிப் பேசுகின்ற பாவனை இந்த படத்தில் அமைந்திருக்கின்ற காட்சி. இந்த பழனி பாபா எந்த அளவிற்கு இந்த அரசாங்கத்திலே ஆதாயங்களைப் பெற்றிருக்கிறார் என்பதற்கு பல ஆதாரங்களை என்னால் சொல்லமுடியும், வக் போர்டு சார்பாக அவர் ஒரு பெரிய பதவியில் அமர்த்தப்பட்டிருக்கிறார். நம்முடைய அமைச்சர் பொன்னையன் அவர்களுக்கும், அவருக்கும் தொடர்பு உண்டு என்பதை இந்தக் கலர் படம், வண்ணப்படம் காட்டிக் கொண்டிருக்கிறது. ஒருவருக்கொருவர் அக்கேஷனலாக நடைபெற்ற சம்பவம் அல்ல. இந்த அரசினுடைய அதிகாரிகளிடத்தில் இந்த பழனி பாபாவுக்கு எவ்வளவு தொடர்பு இருக்கின்றது என்பதை நான் நம்முடைய கம்யூனிஸ்ட் தோழர்களின் கவனத்திற்கு ஒன்றைக் கொண்டு வர விரும்புகிறேன். நாங்களும், நீங்களும் சேர்ந்து தொழிலாளர்கள் வதைக்கப்படுகின்றார்கள் என்ற காரணத்திற்காக ஒரு பந்த் நடத்தினோம். அந்த பந்த் நடத்திய மறுநாள், பழனி பாபா நம்முடைய போக்குவரத்து அமைச்சர் பொன்னையன் அவர்களோடு பேசுகிறார். சர்க்காருடைய அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். அரசு அதிகாரிகளிடத்திலே பேசும் போதே, டேப் செய்யக் கூடியவர் பழனி பாபா அவர்களிடத்திலே ஜாக்கிரதையாக நடந்து கொள்ள வேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.

[முற்பகல் 11-10]

நம்முடைய ஹர்த்தால் நடைபெற்றது—வேலை நிறுத்தத்திற்கு கடைஅடைப்புக்கு மறுநாள் பழனி பாபா அமைச்சர் பொன்னையனோடு பேசுகிறார். படிக்கிறேன். கேளுங்கள். தேவைப்பட்டால் சபாநாயகரிடம் அந்த டேப் ரெக்கார்டைப் போட்டுக் காட்ட நான் தயாராக இருக்கிறேன்.

'ஹலோ'

பொன்னையன் ; எஸ்

பாபா சொல்கிறார் Can I speak to the Transport Minister?
பொன்னையன், பாபா, Good Morning. How are you?

பாபா ; Fine ரொம்ப நேரமாக ட்ரை மண்ணிக் கொண்டிருந்தேன். எங்கேஜ்டு ஆக இருந்தது.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

பொன்னையன் : நேற்றெல்லாம் நம்ப கட்சித் தொண்டர்களை வீட்டுக்கு வரவழைத்து எல்லா 14 தொகுதி அமைப்பாளர்களையும் கஷ்டப்பட்டு இரண்டு நாளாக உழைத்தார்களே அவர்களுக்கு நன்றி சொல்ல ஒரு சின்ன பார்ட்டி கொடுத்து அனுப்ப மணி இரண்டே முக்கால் (என்ன பார்ட்டி தெரிகிறதா)

(பதினான்கு அமைப்பாளர்கள் கட்சித் தொண்டர்கள் அனைவருக்கும் பார்ட்டி கொடுக்கப்படுகிறது அமைச்சர் பொன்னையன் அவர்கள் வீட்டில்.)

பாபா : அப்படியா?

பொன்னையன் : அப்பறம் படுத்தது மணி 3 ஆச்சு. 3 மணிக்குப் படுத்ததால் ரொம்ப டயர்டு. டேக்கிங் ரெஸ்ட்.

பாபா : நான் தலைவரோடு மதுரையில் இருந்து விட்டு வந்தேன்.

(தலைவர் என்றால் முதலமைச்சர்.)

அப்புறம் முஸ்லிம் காலேஜ், லேடிஸ் காலேஜ்....

(பொன்னையன் அதைக் காதில் வாங்கிக் கொள்ளாமல் வீரப் பிரதாபங்களைப் பேசுகிறார்.)

பொன்னையன் : Party candidates on one side have volunteered tremendously throughout the State, the Police as a second cadre. They did very particularly..

நான் சொல்லிவிட்டேன், தலைவரிடம். சிறப்பாக காவல் துறையினர் செய்திருக்கிறார்கள். கட்சிக்காரர்களும் செய்திருக்கிறார்கள்.

(என்ன செய்திருக்கிறார்கள்—கடை அடைப்பில் நம்மை அடித்தார்கள் அல்லவா? அது)

பாபா : ஒண்டர்ஃபுல்.

பொன்னையன் : ரியலி..

பாபா : மழை வந்ததுங்களா?

## அமைச்சரவையின் கொள்கையை நிராகரிக்கும் தீர்மானம்

[திரு. மு. கருணாநிதி] [1979 நவம்பர் 3

பொன்னையன் : இங்கு ஒன்றும் மறைவு இல்லை. The Police did wonderful work. ஆரம்பத்தில் ~~நம்ம கட்சி~~ ஆட்சிக்கு வந்ததும் போலீஸ் எல்லாம் இருந்தார்கள் பாருங்கள். கொஞ்சம் எனிமிகளாக—ஆன்டி அ. தி. மு. க. காரர்களாக.

பாபா : ஆமா.

பொன்னையன் : இப்போதெல்லாம் புரிந்து கொண்டார்கள் சீஃப் மினிஸ்டர் ஸ்டிரிக்டாக இருக்கிறார். ஸ்டெடியாக இருக்கிறார். நாலைந்து கருணாநிதிகள், கல்யாண சுந்தரங்கள் வெளியே பேசினால் கூட தமிழ்நாட்டு மக்கள் எல்லாம் முதலமைச்சர் பின்னால்தான் இருக்கிறார்கள். காலாகாலத்திற்கும் இருப்பார்கள் என்பதை போலீஸ்காரர்கள் புரிந்து கொண்டார்கள்.

பாபா : அப்படியா ?

பொன்னையன் : ஒரு ஸ்டேட்மெண்ட் வானொலியில் பேசினார் பாருங்கள். (சொல்கிறார் பொன்னையன்.)

(என்ன ஸ்டேட்மெண்ட் தெரியுமா?)

(அதாவது ஸ்ட்ரைக் நடக்கக் கூடாது, பொது மக்கள் பார்த்துக் கொள்வார்கள் என்று முதலமைச்சர் பேசினாரே அந்த ஸ்டேட்மெண்ட்.)

பந்த் உங்களுக்கெல்லாம் உண்மையிலேயே

பாபா : ரொம்ப எஃபக்டிவ் ஆக இருந்தது.

பொன்னையன் : ஆமாம் உண்மையிலேயே அது தமிழ் நாட்டு மக்கள் மத்தியில் ஏற்பட்ட கிளர்ச்சி, பயங்கரமானது. இந்த வெற்றிக்குக் காரணம், பந்த் உடைந்ததற்குக் காரணம் எம். ஜி. ஆருடைய பேச்சு. (பொன்னையன் சொல்லுகிறார்.)

பாபா : ரொம்ப, அதுவும் நிறுத்தி நிதானமாக கிளியராக அழுத்தி பேசினார். (பாபா சொல்லுகிறார்.)

பொன்னையன் : எஃபக்டிவ் ஆக இருந்தது. எல்லா பேப்பரிலும் எடுத்து அருமையாகப் போட்டிருந்தார்கள். அதைப் படித்தவுடனே, தி. மு. க.வினுடைய தீவிர தொண்டர் உயிர் நாடியாக இருக்கிறவன் கூட, இப்படி ஒரு உள்ள உணர்வுடைய எம். ஜி. ஆரை எதிர்த்தா ஒரு பந்த் நடத்துவது என்று மாறி விடுவார்கள். அப்படி அருமையாக அமைந்திருந்தது. அதனால் 'பப்ளிக் ஓவர்வெல்மிங் சப்போர்ட்'. அதனால் போலீஸ்காரர்கள் ரொம்ப கோவாப்பரேட் பண்ணினாங்க.

பாபு : அப்படியா?

பொன்னையன் அதுவும் சிட்டியில் போலீஸ் ரொம்ப ஸ்ட்ரமன்டலி ஒர்க். பரமகுரு லத்தியை எடுத்து அடிங்கடா என்று உத்தரவு போட்டார்.

(திரு. உமாநாத் அவர்களே, பொன்னையன் சொல்லுகிறார்) அவர்கள் லத்தியை எடுத்து அடிங்கடா என்று உத்தரவு போட்டார். அடியுங்கள், நொறுக்குங்கள் என்று உத்தரவு போட்டார்.

அவர் போட்ட அந்த ஸ்ட்ரிக்ட் இன்ஸ்ட்ரக்ஷன்ஸ் என்ன ஆயிற்று என்றால்: அவர் இன்ஸ்பெக்டர், டி. எஸ். பி. ஏ. சி. டி. சி.-யை எல்லாம் மீட்டிங் போட்டு கூப்பிட்டு ஸ்ட்ரிக்டாகச் சொல்லி விட்டார். எனக்கு வேண்டியது இந்த பந்த் உடைக்க வேண்டுமென்று உத்தரவிட்டார்.

இப்படி பேச்சு வார்த்தை தொடர்ந்து கொண்டு போகிறது.

இந்த பாபா தான் ஏற்கனவே சென்னையில் 20-5-78 ஆம் தேதி பெரம்பூரிலுள்ள நசரத் சையத் ஹஜ்ரத் சேன் ஷா காதிரி தர்கா என்ற பெரிய தர்காவையும் மசூதியையும் புதுப்பிக்க அமைக்கப்பட்ட கமிட்டியில் ஒரு உறுப்பினராக நியமிக்கப்பட்டிருக்கிறார் என்பதையும் நான் இங்கே நினைவுபடுத்தக் கடமைப் பட்டிருக்கிறேன்.

1979 மே மாதம் தஞ்சை நாகை இடைத் தேர்தலுக்கு முன்பு இந்த பாபா மீது முதலமைச்சருக்குக் கோபம் ஏற்பட்டது. பாபா என்ன செய்தார் தெரியுமா?

சில ஜனதா கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களோடு தொடர்பு கொண்டு, தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு, தன்னுடைய சமூக நல இயக்கத்தின் சார்பாக நடத்தப்படும் விழாவுக்கு ஒரு மத்திய அமைச்சரை அழைக்க வேண்டுமென்று கேட்கிறார். இந்த டெலிபோன் செய்தி முதலமைச்சருக்குச் செல்லுகிறது. எனவே, 1979 மே 28 ஆம் தேதி பாபாவை இல்லத்திற்கு அழைக்கிறார். டேப் செய்யப்பட்ட செய்திகளை எல்லாம் போட்டுக் காட்டி பாபாவைக் கடுமையாக எச்சரிக்கை செய்து அவரை வெளியேற்றுகிறார்.

ஆக, ஜனதா கட்சியினுடைய அமைச்சர் ஒருவரை அவர் அழைக்கிறார் என்ற காரணத்திற்காக பழனிபாபா கடுமையாக எச்சரிக்கப்பட்டு அனுப்பப்படுகிறார். அதனால்தான் இந்த

எச்சரிக்கைகள் எல்லாம். அதற்குப் பிறகு இந்த அறிக்கைகள் எல்லாம். இப்போது பழனிபாபா காரில் போனால்கூட சோடா பாட்டிலை எடுத்து அவர் மேல் அடிக்கிறார்கள், அவருடைய உயிருக்கு ஆபத்து. பழனிபாபா ஐ. ஜிக்கும் மற்றும் சில முக்கியமான பொறுப்பிலுள்ளவர்களுக்கும் தன்னுடைய உயிருக்கு ஆபத்து வருமானால் இந்த ஆட்சியாளர்கள்தான் பொறுப்பு; அதற்கு முதலமைச்சர் அவர்கள்தான் பொறுப்பு என்ற வகையில் கடிதங்களை அனுப்பியிருக்கிறார் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

அடுத்தபடியாக நம்முடைய போலீஸ் இலகாவைப்பற்றி நடைபெறுகின்ற வேலை நிறுத்தத்தைப் பற்றியல்ல. அதைப் பற்றி நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்களும் எதிர்க்கட்சிகளினுடைய தலைவர்களும் மிக நிரம்ப எடுத்துக் கூறியிருக்கிறார்கள். போலீஸ் இலாகா எந்த அளவிற்கு இன்றைக்கு ஒரு நிர்வாகச் சீர்கேடுடைய இலாகாவாக ஆக்கப்பட்டிருக்கிறது என்பதற்கு ஒன்றிரண்டு உதாரணங்களை மாத்திரம் நான் சொல்ல விரும்புகிறேன்.

ஐ. ஜி. பதவியிலிருந்து ஏற்கெனவே எக்ஸ்டன்ஷனிலேயிருந்த மிஸ்டர் ஸ்டிரேசி அவர்கள் 31-5-1979, அதாவது மே மாதம் ஐ. ஜி. பதவியிலிருந்து ரிடையர் ஆகிறார், ஏற்கெனவே எக்ஸ்டன்ஷனில் இருந்தவர் மே மாதம் 31 ஆம் தேதி 1979ஆம் ஆண்டிலே ரிடையர் ஆகிறார். வயது விதிப்படி அவர் அந்தத் தேதியிலே ரிடையர் ஆக வேண்டும். ஆனால் தொடர்ந்து அவர் வேலை பார்க்கிறார். எந்த உத்திரவுப்படி என்றால், எந்த உத்திரவும் கிடையாது. பிறகு அக்டோபர் 12ஆம் தேதி இந்த அரசு ஒரு அவசரச் சட்டம் போடுகிறது. தமிழ்நாடு போலீஸ் சட்டத்திலே இன்ஸ்பெக்டர் ஜெனரல் ஆப் போலீஸ் என்ற வார்த்தைகளுக்குப் பதிலாக டைரக்டர் ஜெனரல் ஆப் போலீஸ் என்று மாற்றுகிறார்கள்.

வேடிக்கை என்னவென்றால் அந்த அவசரச் சட்டத்திற்கு ரெட்ராஸ்பெக்டிவ் எபக்ட் கொடுத்து ஜூன் ஒன்றாம் தேதியிலிருந்து அந்த அவசரச் சட்டம் அமலுக்கு வரும் என்று சொல்கிறார்கள். இது முறைதானா என்பதற்கு எனக்குப் பதில் வந்தாக வேண்டும். மே மாதம் ரிடையர் ஆகிற ஒருவர், அக்டோபர் 12ஆம் தேதி டைரக்டர் ஜெனரல் ஆப் போலீஸ் என்ற ஒரு பதவிக்கு மாற்றப்படுகிறார், அவருக்காக ஒரு அவசரச் சட்டம் போடப்பட்டு ஜூன் மாதம் 1ஆம் தேதியிலிருந்து ரெட்ராஸ்பெக்டிவ் எபக்ட் கொடுக்கப்படுகிறது என்றால் இந்த இடைக்காலத்தில்—இவர் மே மாதம் 31 ஆம் தேதி ரிடையர் ஆனபோதிலும் அக்டோபர் 31 ஆம் தேதி வரையிலும்— எந்தவிதமான உத்திரவும் இல்லாமல் அவரை பதவி

நீடிக்கச் செய்வது பிறகு ஒரு அவசர உத்திரவு மூலமாக ரெட்ராஸ்பெக்டிவ் கொடுத்து நீடிக்கச் செய்தது நியாயம்தானா? சட்டப்படி முறைதானா? இந்தக் கேள்விக்கு நான் பதில் வேண்டுகிறேன். இதை நான் கடுமையாகக் கண்டிக்கிறேன்.

இந்த உத்தரவுக்கு, கீழே உள்ள அதிகாரிகள் எதிர்ப்புத் தெரிவிக்கக்கூடாது என்பதற்காகவே பல ஐ.ஜி. பதவிகள் வாரி வாரி வழங்கப்படுகின்றன. மக்கள் வரிப்பணம் இதற்காகப் பாழடிக்கப்படுகிறது. இப்படி ரிடையர் ஆன திரு. ஸ்டிரேஸி அவர்களுக்கு வேலை தரப்படுகிறது. இன்னும் ரிடையரான அவர் ஒரு புதிய பதவியிலே டைரக்டர் ஜெனரல் ஆப் போலீஸ் என்கின்ற பதவியிலிலே அமர்ந்து கொண்டிருக்கின்ற நேரத்திலே தொடர்ந்து ஐ. ஜி.க்கு உரிய யூனிபாரத்தை அணிந்து கொண்டிருக்கிறார். இதற்கு சட்டம் இடம் தருகிறதா என்றால் இல்லை. இதற்கு நம்முடைய மத்திய அரசாங்கம் யூனிபார்ம் அணிவதைப்பற்றி சில விதிகளைத் தயாரித்து இருக்கிறது. அந்த விதிகள் என்னவென்றால் Government of India have decided that there is no objection to permission being granted by State Governments to Indian Police Service Officers to wear after retirement uniforms of the rank last held by them immediately before retirement on ceremonial occasions and police parades. அதாவது, விசேஷமான நிகழ்ச்சிகளுக்கும் போலீஸ் பெரேட் போன்றவைகளுக்கும் ரிடையர் ஆன போலீஸ் ஆபீஸர்களுக்கு, அவர்களுக்கு அத்தகைய போலீஸ் யூனிபார்ம் அணிவதற்கு மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க உத்திரவு வழங்க அப்ஜக்ஷன் கிடையாது என்று சொல்லப் படுகிறதே தவிர அவர்கள் சாதாரண நாட்களில் இந்த யூனிபாரத்தை அணியலாம் என்பதற்கு எந்தவிதமான விதியும் கிடையாது. ஆகவே விதிமுறைகளுக்கு மாறாக இன்றைக்கு யூனிபாரத்தோடு அந்தப் பதவியிலே இருந்துகொண்டிருக்கிறார். நான் இந்தக் கண்டனத் தீர்மானத்திலே வலியுறுத்திக் கூறுவதெல்லாம் 10 நாட்களுக்குள் அல்லது ஒரு வாரத்திற்குள்ளாக ஏற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு அவர் அந்த யூனிபார்ம் இல்லாமல் அந்த போலீஸ் பணியை நடத்த வேண்டுமே அல்லாமல் யூனிபாரத்துடன் நடத்துவாரேயானல் யார் கோர்ட்டிற்குப் போனாலும் அவர் அந்த யூனிபாரத்தை கழற்ற வேண்டுமென்ற அடிப்படையிலே கோர்ட்டிற்குப் போக வேண்டிய நிலைமை ஏற்படும் என்பதை நான் இந்த அவைக்கு முதலமைச்சருக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து பஸ் ஊழல். பஸ்களை தேசியமயமாக்க வேண்டுமென்ற கொள்கை படிப்படியாக பேரறிஞர் அண்ணா காலத்திலிருந்து நடவடிக்கை எடுக்கப்பட்டு தொடர்ந்து நிறைவேறி வந்திருக்கிறது.

[திரு. மு. கருணாநிதி] [1979 நவம்பர் 3

(முற்பகல் 11-20)

அண்ணாவிற்குப் பிறகு கழக ஆட்சிக்காலத்தில் பெரிய நிறுவனங்களையெல்லாம், டி. வி. எஸ்., இராமன் அன்ட் இராமன், எஸ். ஆர். வி. எஸ்., பொள்ளாச்சி மகாலிங்கத்தினுடைய கம்பெனி போன்ற நிறுவனங்களையெல்லாம் அன்றைக்கு நாட்டுடைமையாக ஆக்கி அவைகளை அரசின் சார்பிலே போக்குவரத்துக் கழகங்களாக மாற்றிய பெருமை திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக்கு உண்டு. அதைத் தொடர்ந்து திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் எல்லா பஸ்களையும் தேசியமயமாக்கிவிட வேண்டும். பொருளாதாரப் பற்றாக்குறையின் காரணமாக எல்லாவற்றையும் உடனடியாகச் செய்ய முடியாது என்றாலும், மாவட்ட வாரியாக அந்தப் பணியை நிறைவேற்ற வேண்டுமென்ற முறையை வகுத்து, முதலாவதாக நீலகிரி மாவட்டத்திலே உள்ள வழித்தடங்களை, பஸ்களை நாட்டுடமையாக்குவது என்று முடிவெடுத்து, செய்தோம். பிறகு பஸ் முதலாளிகள் நீதிமன்றத்திற்குச் சென்றார்கள். உயர்நீதி மன்றத்திலே அவர்களுடைய வழக்கு எடுபடவில்லை. அரசுக்குச் சார்பாகத் தீர்ப்பு கிடைத்தது. பிறகு அவர்கள் இன்றைக்குச் சுப்ரீம் கோர்ட்டுக்குச் சென்றிருக்கிறார்கள்.

இதற்கிடையிலே திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி மாற்றப்பட்டு, இங்கே கவர்னருடைய ஆட்சி நடைபெற்ற காலத்தில் கவர்னர் அவர்கள் ஒரு உத்தரவை பிறப்பிக்கிறார். சுகாதியா கவர்னராக இருந்தபொழுது 1976-ஆம் ஆண்டு ஒரு உத்தரவைப் பிறப்பிக்கிறார். ஒருவர் மூன்று பேருந்துகள் வைத்துக் கொள்ளலாம் என்று ஒரு உத்தரவு பிறப்பிக்கப்படுகிறது. ஆனால் அந்த உத்தரவில் தெளிவற்ற நிலை இருந்தது. உதாரணமாக அந்தத் தேதி, அதாவது 1-11-76 என்ற அந்த உத்தரவு இடப்பட்ட தேதியானால் அந்த 1-11-76-க்குள் ஒருவர் ஐந்து அல்லது ஆறு பேருந்துகளுக்கு உரிமையாளராக இருந்தால் மீதமுள்ள பேருந்துகளை என்ன செய்வது? இந்தக் கேள்விக்குச் சரியான விடை கிடைக்கவில்லை. அவைகளை அரசாங்கமே எடுத்துக்கொண்டால் பிரச்னை தீர்ந்து விடும். ஆனால் அரசாங்கத்தினுடைய, கவர்னர் போட்ட அந்த உத்தரவில், கவர்னர் ஆட்சியிலே அதுகுறித்துத் தெளிவாக எதுவும் சொல்லப்படவில்லை. எனவே, மூன்று பேருந்துகளுக்குமேல் வைத்து இருந்தவர்கள் தங்களுடைய உறவினர்களுடைய பெயருக்கு மாற்ற அதிகாரிகளுடைய உதவியை நாடினார்கள். அரசாங்கம் எந்த உத்தரவைப் போட்டும் அப்பொழுது தடுக்கவில்லை. எனவே, ஒரு 'பினாமி' ஏற்பாட்டுக்கு அந்த உத்தரவு ஏற்பாடு செய்தது என்றுதான் கருதப்பட்டது.

அதற்குப் பிறகு அண்மையில் தஞ்சை, மதுரை மாநகராட்சித் தேர்தல் நேரத்தில் நம்முடைய பஸ் முதலாளிகள் நம்முடைய முதலமைச்சரை, போக்குவரத்துத் துறை அமைச்சரை,

1979 நவம்பர் 3] [திரு. மு. கருணாநிதி]

இவர்களையெல்லாம் அணுகி, இந்த மூன்று என்று இருப்பதை 5 பஸ்களாக ஆக்க வேண்டுமென்று கோரிக்கை விடுத்து, ஏறத்தாழ 70 இலட்சம் ரூபாய் அதற்காகக் கொடுக்கப் பட்டிருக்கிறது என்ற குற்றச்சாட்டை இந்த மாமன்றத்திலே நான் பகிரங்கமாகச் சாட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

அப்படிக் கொடுக்கப்பட்ட அந்தப் பணத்திற்கு உடனடியாக உத்தரவு வழங்கப்படவில்லை என்றாலும், இப்பொழுது அண்மையிலே அந்த மூன்று பஸ்கள் என்பது ஐந்து பஸ்களாக ஆக்கப்படும் என்கின்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. அந்த உத்தரவிலேகூட, இப்பொழுதுள்ள பஸ் முதலாளிகள் ஏறத்தாழ 70 இலட்சம், பிறகு கடைசியாக 30 இலட்சம் என்று கிட்டத்தட்ட ஒரு கோடி ரூபாயை அவர்களுக்குக் கொட்டித் தீர்த்து விட்டார்கள், கொடுத்து விட்டார்கள்.

என்றாலும்கூட, அவர்களுக்கு இன்னும் குறைபாடு நீங்க வில்லை. அவர்களுக்கிருக்கின்ற குறைபாடெல்லாம், ஏற்கனவே உள்ள தற்காலிக வழித்தடங்களில் போக்குவரத்துத் கழகங்கள் அப்ஜெக்ஷன்ஸ் செய்திருக்கின்றன, மற்றவர்களுக்குத் தரக் கூடாது என்று. அது மாத்திரம் அல்லாமல், அதேநேரத்தில் போக்குவரத்துக் கழகங்கள், நம்முடைய கட்டபொம்மன், பெரியார், அண்ணா, பல்லவன், சேர, சோழ, பாண்டியன் ஆகிய இத்தகைய போக்குவரத்துக் கழகங்களெல்லாம் அங்கே வழித்தடங்களுக்கு மனுச் செய்து கொண்டிருக்கின்றன. இப்பொழுது பஸ் முதலாளிகளினுடைய கோரிக்கை, நீங்கள் இந்த அப்ஜெக்ஷனை வாபஸ் வாங்கிக்கொள்ள வேண்டும்; இந்த வழித்தடங்களுக்கு போட்டிருக்கின்ற மனுக்களை வாபஸ் வாங்கிக் கொள்ள வேண்டுமென்று. அப்படியானால் மேலும் ஒரு கோடி ரூபாய் இதோ தயார் என்று வசூலித்து வைத்துக் கொண்டிருக்கிறார்கள். இதற்காகத்தான் இப்பொழுது என்ன ஏற்பாடு நடைபெறுகிறது என்றால். உதாரணமாக, பல்லவன் போக்குவரத்துக் கழக பஸ், சென்னையிலிருந்து திண்டிவனம். திருவண்ணாமலை, அரூர் வழியாகச் சேலம் போவதாக வைத்துக் கொள்வோம். அதற்கு இப்பொழுது செய்யப்படுகின்ற ஏற்பாடு தந்திரமான ஏற்பாடு என்னவென்றால், நாங்கள் சென்னையிலேயிருந்து சேலத்திற்கு எங்களுடைய போக்கு வரத்துக் கழகத்தினுடைய பஸ்ஸை விட்டு விடுகிறோம். இடையிலே திருவண்ணாமலையிலேயிருந்து அரூர் வரை ஒருவருக்கும், திண்டிவனத்திலிருந்து திருவண்ணாமலை வரை இன்னொருவருக்கும் என்று கூறுபோட்டு, பங்கு போட்டு, ஆங்காங்கு அந்த பஸ் முதலாளிகளுக்குச் சலுகைகள் செய் கிறோம் என்று பேசப்பட்டு, அதற்குப் பெருந்தொகை இலஞ்சமாக வாங்குவதற்குக் காத்துக் கொண்டிருக்கிறார்கள்.

இன்னொரு உறுதியையும் அவர்கள் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் கேட்டுக்கொண்டிருப்பது, சுப்ரீம் கோர்ட்டிலே, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக்காலத்திலே தேசிய மயமாக்க வேண்டுமென்று கொண்டுவரப்பட்ட திட்டத்தை எதிர்த்து முதலாளிகளால் போடப்பட்டிருக்கின்ற அந்த வழக்கில் வலியுறுத்துவது இல்லை என்ற அளவிற்கு நீங்கள் வாக்களிக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். இது தேசிய மயத்திட்டம் எந்த அளவிற்கு இன்றைக்கு செயல் படுகிறது என்பதற்குத் தக்க உதாரணம் ஆகும். ஏனென்றால், குதிரைப் பந்தயத்தைத் தேசிய மயமாக்கப்போவதாகச் சொன்ன நம்முடைய முதலமைச்சரவர்கள் இன்றைக்குக் குதிரைப்பந்தயம் எப்படிவளரலாம், எந்த வகையிலே வளம் பெறலாம், குதிரைப் பந்தயத்திலே இருக்கின்ற முதலாளிகள் வளம் பெறலாம் என்ற அளவிற்கு அவர்கள் பாடுபட்டுக்கொண்டிருக்கின்ற காரணத்தால் தேசிய மயமாகும் திட்டங்கள் எந்தக் கதிக்கு ஆளாகிக் கொண்டிருக்கின்றன என்பதற்காகத்தான் இதை எடுத்துச் சொன்னேன்.

மின்சார இலாகாவிலே ஒன்று. தமிழ்நாடு மின்சார இலாகா எப்படி திறமையாகச் செயல்படவில்லையென்பதை இப்பொழுது காபந்து சர்க்கார்—கூட்டணி அரசிலே இருக்கிற மத்திய அரசினுடைய மின்துறை அமைச்சர் கே. சி. பந்த் அவர்கள் சமீபத்திலே மிகக் கடுமையாக விமர்சித்திருக்கிறார்.

பொதுவாக, எவ்வளவு சதவீதம் வெட்டு என்று சொல்லாமல் இருப்பதில் நம்முடைய மின் துறை அமைச்சர் மிகத் திறமை சாலியாக இருக்கிறார் என்றாலும் அடிக்கடி மின் வெட்டால் மக்கள் பாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். திடீரென்று 1 மணி நேரம் கரன்ட் வராது. அந்த ஊரிலே கேட்டால் 'இந்த ஊரிலே இப்படித்தான் சார்' என்று சொல்வார்கள். அந்த அளவுக்கு இன்றைக்கு விவசாயிகளும் மற்றவர்களும் கஷ்டப்படுகிற சூழ்நிலை இருக்கிறது.

அதே நேரத்தில், லோயர் மேட்டூரில் ஒரு மின் திட்டம் தொடங்கப்பட இருக்கிறது. அதிலே மிகப் பெரிய ஊழலுக்கான வித்திடப்பட்டிருக்கிறது என்பதை இந்தக் கண்டனத் தீர்மானத்தில் சுட்டிக்காட்டுவது என்னுடைய பெரும் கடமையாகும்.

இந்த லோயர் மேட்டூர் மின் திட்டத்திற்காக உலகெங்கும் இருந்தும் 'குளோபல் டெண்டர்' கோரப்பட்டிருக்கிறது. அதிலே பல்வேறு நாடுகளுடைய, உலகப் பிரசித்திபெற்ற கம்பெனிகள் டெண்டர் போட்டிருக்கிறார்கள். தமிழ் நாட்டைச் சேர்ந்த ஒரு கம்பெனி கூட, கனடா நாட்டு கொலாபரேஷனோடு

ஒரு டென்டரைப் போட்டிருக்கிறது. ஆனால் என்ன நடந்தது என்றால், குறைந்த டெண்டருக்குப் பதிலாக யார் மிக அதிக டெண்டர் போட்டிருக்கிறார்களோ, அவர்களைச் சிபாரிசு செய்து இப்பொழுது மத்திய அரசுக்கு அந்த டெண்டரை அனுப்பியிருக்கிறார்கள். ஒரு ஜப்பானிய கம்பெனி ஃப்யூஜி எலக்டிரிக்கல்ஸ் என்று அதற்குப் பெயர்; அவர்கள் 30 கோடி ரூபாய்க்கு டெண்டர் போட்டிருக்கிறார்கள். ஆனால், ஃப்ரெஞ்சு கம்பெனி, டென்டர் வரிசையிலே 10-வதாக இருக்கிறது 47 கோடி ரூபாய்க்கு டெண்டர் போட்டிருக்கிறது தமிழ்நாடு மின்சார வாரியம் யாருக்குப் பரிந்துரை செய்ய செய்ய வேண்டும்? 30 கோடி ரூபாய் போட்ட ஜப்பானிய கம்பெனிக்கு அல்லவா? செய்யவில்லை. அதற்கு மாறாக, 47 கோடி ரூபாய், 17 கோடி ரூபாய் அதிகமாக டெண்டர் போட்டிருக்கிற ஃப்ரெஞ்சு கம்பெனிக்கு சிபாரிசு செய்து பரிந்துரை செய்து அனுப்பியிருக்கிறது. அது, இரண்டாவது கட்டமாக, பொதுப் பணித்துறைக்கு அந்த ஃபைல் வருகிறது. அந்தத் துறை அதையே சிபாரிசு செய்து இப்பொழுது மத்திய அரசு மின் துறை இலாகாவிற்கு அனுப்பியிருக்கிறது. அண்மையிலே, நம்முடைய முதலமைச்சருடைய இதயத்திலே இடம் பெற்றிருக்கிற, பயணக் கட்டுரையிலே இடம் பெற்றிருக்கிற ஆசிரியர் ஒருவர் பாரிஸ் நாடு வரையிலும சென்று பயணக் கட்டுரை திடீரென்று எழுதியிருப்பதற்கான காரணமும் மர்மமும் இதிலே அடங்கியிருக்கிறது என்பதையும் நான் குற்றமாகச் சாட்ட விரும்புகிறேன். தமிழக அரசு வேண்டுமென்றே டெண்டர் தொகையை உயர்த்தி, பொதுமக்களுடைய வரிப் பணத்தை விரயம் செய்கிறது என்ற குற்றச்சாட்டையும் நான் இங்கே முன் வைக்க விரும்புகிறேன், மத்திய அரசு இந்த டெண்டரை அங்கீகாரம் செய்யக் கூடாது. எனென்றால், 17 கோடி ரூபாய் அதிகமான ஒரு டெண்டர். அதை எப்படியாவது அங்கீகாரம் செய்ய வேண்டுமென்று தமிழக அரசு வற்புறுத்திக் கொண்டு வருகிறது. மத்தியில் கூட்டணி அரசு இருக்கிறது என்ற காரணத்தால் அதற்கு அங்கீகாரம் செய்யக் கூடாது மத்திய அரசு என்று இந்த மாமன்றத்தின் சார்பாக நான் கேட்டுக் கொள்ளவும் கடமைப்பட்டிருக்கிறேன்.

கடைசியாக ஒரு குற்றச்சாட்டோடு, ஒரு நீண்ட குற்றச் சாட்டோடு என்னுடைய உரையை முடிக்க விரும்புகிறேன். கடந்த முறை நடைபெற்ற சட்டமன்றக் கூட்டத்தில் நம்பிக்கையில்லா தீர்மானத்தின் பொழுது நான் பேசும் பொழுது கப்பல்கள் வாங்குகிற பேரத்திலே பெரும் ஊழல்கள் நடைபெற இருந்தன என்பதை குறிப்பிட்டு $2\frac{1}{2}$ கோடி ரூபாயிலேயிருந்து 3 கோடி ரூபாய்அளவிற்கு கமிஷன் என்கிற பெயரால் லஞ்ச ஊழல் நடைபெற இருந்தது என்பதையும் தக்க நேரத்தில் திராவிட முன்னேற்றக்கழகம், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி,

மார்க்கிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் மூலம் மத்திய அரசுக்கு தமிழ்நாடு அரசு நடத்த இருந்த ஊழல் அறிவிக்கப்பட்டதன் காரணமாக அந்தப் பேரம் நிறுத்தப்பட்டது என்பதையும் நான் சுட்டிக் காட்டினேன், பேரம் நிறுத்தப்பட்டாலும் கூட தி. மு. க., சி. பி. ஐ., சி. பி. எம். நாடாளுமன்ற உறுப்பினர்கள் கொடுத்த புகார் மீது மத்திய அரசு விசாரணைகளை தொடங்காமல் இல்லை, அந்த விசாரணைகள் ஒருபுறம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அதுதான் தமிழ்நாட்டிலே அரசியலை கூட குழப்பத்திலே ஆழ்த்தியிருக்கிறது என்பதற்கு மிக முக்கியமான காரணம். அவைகள், அந்த விசாரணைகள் நடைபெற்று வருகின்றன. இதற்கிடையிலே, பல்கேரியா விலேயிருந்து 3 கப்பல்களை வாங்கப் போவதாக தமிழ்நாடு அரசு தீர்மானித்திருப்பதாகச் செய்திகள் வந்திருக்கின்றன.

[முற்பகல் 11–30]

மேற்கு ஜெர்மனியிலே கப்பல்களை தமிழக அரசு வாங்கவும், இடைத்தரகர் மூலமாக ஊழல் நடத்தவும் திட்டமிடப்பட்டது. சேஷசாயி பேப்பர் மில்லினுடைய அதிபர், சிம்கோ மீட்டர் சேஷசாயி பேப்பர் மில்ஸ் (இரண்டும் தொழிலாளர்களுக்கு மிக அனுசரணையாக இருக்கிற ஒரு தொழில் அதிபரைக் கொண்ட இரண்டு ஸ்தாபனங்கள் என்பதை நானும் நம்முடைய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களும் அறிவார்கள்.) விஸ்வநாதன் மேற்கு ஜெர்மனியுடன் நடைபெற்றிருக்கிற கப்பல் பேரத்திலே ஈடுபட்டிருக்கிறார்கள் என்று நான் குறிப்பிட்டிருக்கிறேன். அப்பொழுது முதலமைச்சர் எந்தப் பதிலும் சொல்லாவிட்டாலும் கூட நான் குறிப்பிட்டதற்கான ஆதாரம் இங்கே என்னிடம் இருக்கிறது. அவைகளை நான் படித்துக் காட்ட விரும்புகிறேன் 27–10–78அன்று kind attention– என்று போட்டு சென்னை பூம்புகார் ஷிப்பிங் கார்ப்பொரேஷன் டெக்னிக்கல் மானேஜர் திரு. அனந்தராமனுக்கு ஒரு டெலக்ஸ் வருகிறது. எங்கே இருந்து வருகிறது. யார் கொடுத்த டெலக்ஸ் தெரியுமா? திரு. எஸ். கே. நடராசன் என்பவர் அந்த டெலக்ஸை பூம்புகார் கப்பல் கார்ப்பரேஷனுக்கு கொடுக்கிறார். யார் அந்த எஸ். கே. நடராஜன் அவர்தான் சிம்கோ மீட்டர்ஸ், சேஷசாயி பேப்பர் மில்ஸ், மேனேஜிங்டைரக்டர் விஸ்வநாதனின் செயலாளர். இப்பொழுது புரியுமென்று நம்புகிறேன், விஸ்வநாதனுக்கும் பழைய மேற்கு ஜெர்மனி கப்பல் வாங்குவதற்கும் உள்ள உறவு என்னவென்று. "The following message has been received from our collaborators Messrs. Blome and Vas, Humburg this morning", என்று இந்த செய்தியைக் கொடுத்து இருக்கிறார். இந்த செய்தியை ஏன் சேஷசாயி கம்பெனி விஸ்வநாதனின் செயலாளர் நடராஜனுக்கு அறிவிக்க வேண்டும்.

1979 நவம்பர் 3] [திரு. மு. கருணாநிதி]

The following message has been received from our collaborators Messrs. Blome and Vas Humburg this morning

புளோம் அண்ட் வாஸ் என்பவர்கள் அந்த காகிதக் கம்பெனியுடைய தொழிற்சாலையினுடைய கொலாபரேட்டர்ஸ். அவர்களிடம் கப்பல் வாங்குவதில் விஸ்வநாதனுக்கு என்ன அக்கறை. கப்பல் வாங்குவது தமிழக அரசினுடைய பூம்புகார் போக்குவரத்துக் கழகம். அதிலே விஸ்வநாதனுடைய செயலாளர் நடராஜனுக்கு இவ்வளவு அக்கறை வருவானேன். அவர் ஏன் பூம்புகார் கார்ப்பொரேஷனுக்கு இதைப் பற்றி எழுத வேண்டும் அவருக்கு வந்த டெலக்ஸ் செய்தி இதுபற்றிய ஆதாரம் நெம்பர் 1.

Next, Attention of Mr. Natarajan-Urgent 6—11—78

மறுபடியும் ப்ளோம் அண்ட் வாஸ் கம்பெனியிடம் இருந்து டெலக்ஸ் வருகிறது. ஹம்பர்க்விருந்து வருகிறது.

After long discussion with S. V.

நீண்ட உரையாடல். யாரோடு. எஸ். விஸ்வநாதனோடு, அவர் நியூயார்க்கிலே இருக்கிறார். நியூயார்க்கிலே இருக்கிற விஸ்வநாதனுக்கு மேற்கு ஜெர்மனி கப்பல் கம்பெனி கொடுக்கிறது. நீண்ட விவாதம் நடக்கிறது. விஸ்வநாதன் நியூயார்க்கிலே இருக்கிற போது நம்முடைய முதலமைச்சர் அவர்களும் நியூயார்க்கிலே இருக்கிறார்கள. ப்ளும் அண்ட் வாஸ் கம்பெனி என்ன தெரிவிக்கிறார்கள் தெரியுமா

After long discussion with S. Viswanathan, New York I yesterday tried for hours to get through to Mr. Singh

மிஸ்டர் சிங் என்பவர் பூம்புகார் ஷிப்பிங் கார்ப்பொரேஷனின் தலைவர்.

"Yesterday I tried for hours to get through to Mr. Singh, Poompuhar by telex and eventually sent a cable, but have not so for confirmation of that cable arrived. Can you check and inform please."

அங்கே அதைப் பார்த்து அந்த விஸ்வநாதன் பேசிய பிறகு பல முறை மிஸ்டர் சிங். சேர்மன் ஆப் தி பூம்புகார் கார்ப்பொரேஷன், அவரிடம் பேச முயற்சித்தோம். முடியவில்லை. எனவே டெலக்ஸ் மூலமாக செய்தி அனுப்பியிருக்கிறார்கள். உடனடியாக நீங்களாவது அவரோடு தொடர்பு கொண்டு அவருக்குத் தெரிவிக்க வேண்டுமென்று நடராஜனுக்கு ஹாம்பர்கிலிருந்து வருகிறது என்றால் விஸ்வநாதனுக்கும் இந்த மேற்கு ஜெர்மனி நாட்டு கப்பல் வாங்குவதாக இருந்த கப்பல் பேரத்திற்கும் எவ்வளவு தொடர்பு என்று நான் முன்பு சொன்ன குற்றச் சாட்டிற்கு இது ஆதாரம் இல்லையா என்று எண்ணிப் பார்க்க வேண்டும்.

இதற்குப் பிறகு முதலமைச்சர் அன்றைக்கு சட்டமன்றத்திலே கூறியபடி பல்கேரியாவில் இருந்து கப்பல் வாங்க உத்தேசிக்கப் படுகிறது. அது ஒரு பெரிய வரலாறு பல்கேரியாவிலிருந்து கப்பல் வாங்குவதற்கான கடிதப் போக்குவரத்து 3—2—79 அன்று ஆரம்பம் ஆகிறது.

பூம்புகார் ஷிப்பிங் கார்ப்பொரேஷன் சேர்மன், எம். டி., எச். எம். சிங், போக்குவரத்துத் துறைச் செயலாளர் திரு. பாங்கோவுக்கு எழுதுகிறார்கள். அந்தக் கடிதத்திலே எழுதியிருக்கிறார். ''பல்கேரியாவிலிருந்து வாங்க வேண்டிய கப்பல் 10·5 மில்லியன் டால (ரூ. 8.40லட்சம்) ரிலிருந்து 10.75 மில்லியன் டாலர் (ரூ. 8.60லட்சம்) வரையிலே விலை கொடுக் கலாம் என்றும் சேர்மன் பேச்சு வார்த்தைகளை 10.5 மில்லியன் டாலரில் (ரூ. 8.40லட்சம்) இருந்து விலையைத் தொடங்கலாம்'' என்று அவர் குறிப்பிட்டிருக்கிறார். அதற்கு ஆதாரம் இருக்கிறது இதிலே குறிப்பிடப்பட்டிருக்கிற 3வது ஆதாரத்தை எடுத்து வைத்திருக்கிறார்கள்.

எச். எம். சிங். எழுதியுள்ள அவரது கடிதத்தில் சி. வி சுப்பிரமணியம் என்பவர் பெயர் குறிப்பிடப்பட்டு இருக்கிறது, சுப்பி, சுப்பி என்று செல்லமாக அழைக்கப்படுகின்ற அவர் எப்படி மத்தியில் பாலா, பாலா என்று செல்லமாக அழைக்கப்படும் பாலசுப்பிரமணியம் என்று ஒருவர் இருக்கிறாரோ- அதைப்போல் சுப்பி, சுப்பீ என்று செல்லமாக அழைக்கப்படுகிற சுப்பிரமணியம் என்பவர் மெக்கனாஸ் அண்ட் மெக்கனீஸ் என்கிற ஷிப்பிங் ப்ரொக்கர்ஸ் கம்பெனியின் எக்சிகியூட்டிவ்வாக சில காலம் இருந்தவர். அது மாத்திரம் அல்ல. சென்னை நேதாஜி சுபாஸ் சந்திர போஸ் சாலையில் உள்ள சௌத் இந்தியா எக்ஸ்போர்ட் கம்பெனி பிரைவேட் லிமிடெட்டுடன் தொடர்பு கொண்டவர். எல்லாவற்றையும் விட சித்ரா கிருஷ்ணசாமிக்கு அருமை நண்பர். இதிலிருந்து எல்லாம் புரிந்து கொள்ளலாம், இந்த சுப்பி என்கிற சுப்பிரமணியம் தான் பல்கேரியா கப்பல் தளத்தின் பிரதிநிதியாக இந்தப் பேச்சு வார்த்தைகளிலே உள்ளே நுழைகிறார். 5-2-79-ல் பூம்புகார் ஷிப்பிங் கார்ப்பரேஷன் சென்னையில் இருந்து சி. வி. சுப்பிரமணியம் என்கிற சுப்பிக்கு ஒரு டெலக்ஸ அனுப்புகிறது. அந்த டெலக்சில் 10.75 மில்லியன் டாலருக்கு, அதாவது 8 கோடியே 60 லட்சம் ரூபாய்க்கு கப்பல் ஒன்று வாங்கலாம் என்ற உறுதியான 'ஆபர்' கொடுக்கிறது. அதற்கான ஆதாரம், இதோ இந்த டெலக்ஸ்.

அதற்கடுத்தாற்போல், அந்தக் கப்பலின் விலை 11 மில்லியன் டாலர் என்று அயல் நாட்டு தரகர் கம்பெனி விளம்பரப்படுத் தியது. எங்களுக்கு 10.75 மில்லியன் டாலருக்குத் தருகிறேன் என்று சொல்லிவிட்டு, 11 மில்லியன் டாலர் என்று விளம்பர

1979 நவம்பர் 3] [திரு. மு. கருணாநிதி]

படுத்தியிருக்கிறீர்களே, என்று சுப்பி என்கிற சுப்பிரமணியம் கேட்கிறார். உடனடியாக பல்கேரியாவில் இருந்து அந்தக் கம்பெனிகாரர்கள் பதில் தருகிறார்கள். நீங்கள் அதைப் பற்றி கவலைப்பட வேண்டாம். நாங்கள் உங்களுக்குச் சொன்ன விலைக்குத் தருகிறோம். நாங்கள் விளம்பரம் வேறு நாட்டுக் காரர்களுக்கு செய்தாலும் கூட உங்களுக்குக் கொடுப்பது நாங்கள் சொன்ன அதே 10.75 மில்லியன் டாலருக்குத் தருகிறோம் என்று எழுதுகிற கடிதம் சுப்பிரமணியம் அவர்களால். சுப்பி என்கிற சுப்பிரமணியம் அவர்களால் பூம்புகார் ஷிப்பிங் கார்ப்பரேஷனுக்கு 6-2-79-ல் தெரிவிக்கப்பட்டது. அதற்கான ஆதாரம் எண் 5.

பிறகு, 6-2-79 அன்று போக்குவரத்துத் துறை செயலாளர் பாங்கோ, ஐ. ஏ. எஸ்., அவர்கள் பூம்புகார் ஷிப்பிங் கார்ப்பரேஷன் சேர்மன் எச். எம். சிங் அவர்களுக்கு எழுதிய கடிதம். சுப்பி சம்பந்தப்பட்ட மெக்கானஸ் அன்ட் மெக்கனீஸ் கம்பெனி மூலம் 10.75 மில்லியன் டாலருக்கு அந்தக் கப்பலை வாங்கலாம் என்று அனுமதி தந்து கடிதம் எழுதுகிறார். இதோ அதற்கான ஆதாரம்.

அதே நாளில் சுப்பி சம்பந்தப்பட்ட அதே மெக்கனாஸ் அன்ட் மெக்கனீஸ் கம்பெனி 10.75 மில்லியன் டாலர் விலையை திடீரென்று 11.75 மில்லியன் டாலர் என்று அதாவது 9 கோடியே 40 லட்சம் ரூபாய் என்று குறிப்பிட்டு பூம்புகார் ஷிப்பிங் கார்ப்பரேஷனுக்கு அறிவிக்கிறது ஏன்? 10.75 மில்லியன் டாலருக்கு மேல் நீங்கள் வாங்கத் தேவை இல்லை, நாங்கள் 11 மில்லியன் டாலர் என்று அறிவித்து இருந்தாலும் 10.75 மில்லியன் டாலருக்குத் தருகிறோம் என்று அறுதியிட்டு, உறுதியிட்டு கூறிய அந்தக் கம்பெனி, திடீரென்று 11.75 மில்லியன் டாலர் என்று ஒரு கப்பலுக்கு விலை நிர்ணயிக்க வேண்டிய அவசியம் என்ன? இங்கே தான் சுப்பி, சித்ரா கிருஷ்ண சாமி அவர்களுடைய தந்திரங்கள். அவர்களுடைய மாய வலைகள் பின்னப்படுகின்றன. இந்த விலை உயர்வைப் பார்த்து வியப்படைந்த பூம்புகார் ஷிப்பிங் கார்ப்பரேஷன் சேர்மன் எச். எம். சிங், ஐ. ஏ. எஸ்., 7—ம் தேதி பாங்கோவிற்கு எழுதியுள்ள கடிதத்தில்....

In view of this, it is not clear wby Messrs, Mckhinanz had quoted 11.75 milllon dollars for a gearless vessel..

ஒரு கியர்லெஸ் வெஸ்ஸல்லுக்கு 11.75 மில்லியன் டாலர் என்று ஏன் அந்தக் கம்பெனிகாரர்கள் விலையை உயர்த்தியிருக்கிறார்கள் என்று ஆச்சர்யப்படுகிறார்: அதே கம்பெனிகாரர்கள் ஏன் விலையை உயர்த்தினார்கள் என்று நானும் ஆச்சர்யப்படுகிறேன் நீங்களும் ஆச்சர்யப்படுகிறீர்கள். நம்மை விட திரு. எச். எம். சிங். ஆச்சயரிப்படுகிறாரா இல்லையா என்பதற்கு இந்தக்

கடிதத்தை நான் சான்றாக வைக்கிறேன். அவர் இதில் தன் ஆச்சரியத்தைத் தெரிவிக்கிறார். ஏன் அந்த விலைக்கு உயர்த்தினார்கள்?

7-2-79-க்கு அடுத்த நாள் 11.75 மில்லியன் டாலர் அதாவது 9 கோடியே 40 லட்சம் ரூபாய் என்பதை 13.5. மில்லியன் டாலர் அதாவது 10 கோடியே 80 லட்சம் ரூபாய் அளவிற்கு உயர்த்தி அந்தத் தகவலை அதே மெக்கானாஸ் அண்ட் மெக்கன்சி கம்பெனி எச். எம். சிங் அவர்களுக்கு டெலக்ஸ் அனுப்புகிறார்கள். இங்கே பாருங்கள் வேடிக்கையை. 10.75 மில்லியன் டாலருக்கு கொடுக்கிறேன் என்று சொல்லிவிட்டு அதை வாங்கலாம் என்று முடிவு எடுக்கப்பட்டு பிறகு எக்காரணத்தை முன்னிட்டும் 11 மில்லியன் டாலராக மாறாது என்று உறுதி அளிக்கப்பட்டு பிறகு 11.75 மில்லியன் டாலராக அந்தக் கம்பெனிக்கு விலை பெருகி 3-வது நாள் 13.5 மில்லியன் டாலர் என்று அது மாறுகிறது என்றால் மாறுகின்ற காரணத்தால் விலையை உயர்த்திக் கேட்கின்ற காரணத்தால், அதிகமான கமிஷன் ஏறத்தாழ 4 கோடி ரூபாய்க்கு இடையில் உள்ளவர்கள் சுருட்டி தாங்களே எடுத்துக் கொண்டது போக முதலமைச்சருக்கும் பங்கு போட்டுக் கொடுக்க ஒரு பெரிய சதித் திட்டம் தீட்டப்பட்டு இருக்கிறது என்ற குற்றச்சாட்டை நான் இங்கே சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

[முற்பகல் 11-40]

ஆனால் இதை எச். எம். சிங் ஏற்றுக் கொண்டாரா என்றால் ஏற்றுக் கொள்ளவில்லை. அவர் சில பாயிண்ட்களைக் குறிப்பிடுகிறார். என்னகுறிப்பிடுகிறார்? இந்த பூம்புகார் கார்ப்பரேஷன் சேர்மென் இதை எல்லாம் ஆராய்ச்சி செய்து, பிளஸ் பாயிண்ட், மைனஸ் பாயின்ட் இவைகளை எல்லாம் பல்கேரியா கப்பலோடு, ஏற்கெனவே ஜெர்மனியிலே விலை பேசிய கப்பலோடு ஒப்பிட்டு 8-2-1979-ம் தேதிய கடிதத்திலே குறிப்பிடுகிறார்.

இந்த விலையை மத்திய அரசு ஒத்துக் கொள்ளாது. மேலும் ஏற்கெனவே நாம் மேற்கு ஜெர்மானியிலிருந்து வாங்கியிருந்த பால்டிகா டைப் கப்பலோடு ஒப்பிட்டு, அதனுடைய இயந்திரங்களும் மற்றவைகளும்—அவைகளை விட தரக் குறைவானவை என்று குறிப்பிட்டு, அந்த விலைக்கு வாங்கக் கூடாது என்று கருத்துத் தெரிவித்திருக்கிறார்.

"In the light of the above, Government of India may not allow us to purchase the vessels at a higher price when we negotiated for the Baltika type vessels, particularly when the machinery in the engine room has distinct negative point when compared to the Baltica type vessels.'

1979 நவம்பர் 3] [திரு. மு. கருணாநிதி]

இவ்வாறு எச். எம். சிங். பாங்கோ அவர்களுக்கு இதன் பின்னால் மறைந்து கிடக்கும் ஊழலை மிக நாசூக்காக வெளிப் படுத்திக் காட்டி இருக்கின்றார். அதற்கான ஆதாரம், அவர் எழுதிக் கொடுத்ததற்கான ஆதாரமாக இந்த 8-வது ஆதாரத்தை உங்கள் முன்னால் நான் வைக்கிறேன்.

இதற்குப் பின்னால் மார்ச் மாதம் கூடிய அமைச்சரவைக் கூட்டம். மார்ச் மாதத்திலே நம்முடைய காபினட் கூடுகிறது. அதிலே 13 மில்லியன் டாலருக்கு, 10 கோடியே 40 இலட்சம் ருபாய்க்கு கப்பலை வாங்கலாம் என்று இந்த அரசு முடிவு செய்கிறது. இப்படி காபினட் எடுத்து முடிவு உனக்கு எப்படித் தெரியும் என்று கேட்டால், பழைய சுப்பி வருகிறார். சுப்பி என்கிற சுப்பிரமணியம் ஐரோப்பாவுக்கு டெலக்ஸ் கொடுக் கிறார். அதிலே சொல்கிறார். 'பல்கேரியா பேரத்தை தமிழ்நாடு அரசு அப்ரூவ் செய்து விட்டதை அறிவிக்க மகிழ்கிறேன் ஆக, தமிழ்நாடு அரசு அப்ரூவ் செய்து விட்டது சுப்பி என்கிற சுப்பிரமணியத்தால் பல்கேரியாவுக்கு உடனடியாகத் தெரிவிக்கப் படுகிறது.

'இது மிகவும் கஷ்டமான காரியமாக இருந்தது'. ஏன் இருக்காது? 10 மில்லியனை 13 மில்லியனாக ஆக்குவது கஷ்ட மான காரியமாக இருக்காதா?

It was a difficult task
அதற்கு கொஞ்சம் வருத்தமும் படுகிறார், பாருங்கள்

"It has been approved only at 13 million U. S. dollars, but I have assured them that with this approval and when Bango reaches Warna to sign contract Mr. P.

மிஸ்டர் பி என்பவர் அங்கே உள்ள ஒருவர்.—

will definitely reconsider the situation and consider increase points."

என்னய்யா வேடிக்கை? பாயின்ட்களை குறைப்பார் என்று எண்ணுகிறேன் என்று ஒரு இடைத் தரகர் சொல்வதற்குப் பதிலாக சொல்கிறார்.

Mr. P. will definitely reconsider the situation and consider increase points. I am still trying to get authority for 13.1 million dollars.

தமிழ்நாடு அரசு 13 மில்லியன் டாலருக்கு வாங்கலாம் என்று முடிவு எடுக்கிறது. ஆனால் இடைத்தரகராக இருக்கிற சுப்பி, நான் எப்படியும் 13.1 மில்லியன் டாலர் என்கிற விலைக்கு

அதைக் கொண்டு வருகிறேன் என்று அவர் குறிப்பிடுகிறார். குறிப்பிட்டு விட்டு, அதே டெலக்சிலே மேலும் குறிப்பிடுகிறார், பாங்கோ வந்த பிறகு கையொப்பமிடுகிற வைபவத்திற்கு. கையொப்பம் இடுகிற வைபவத்தை சுப்பிரமணியம் அந்த டெலக்சிலே 'சிக்னேச்சர் ஜெர்மனி, என்று குறிப்பிடுகிறார். எனக்காக மிஸ்டர் 'பி' காத்திருக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கையொப்பம் இடுகிற விழா இருந்தாலும் இல்லாவிட்டாலும்,

ceremony or no ceremony-please try best for further points to saves my face.

இன்னும் பாயின்ட்களை உயர்த்தி, என்னைக் காப்பாற்றுங்கள்: என்னுடைய முகத்திலே கரியைப் பூசாமல் பார்த்துக் கொள்ளுங்கள். ஏனென்றால் அதிக விலை கொடுத்து. அதிக கமிஷன் பெறலாம் என்று வாக்களித்து விட்டேன். அதாவது என்னுடைய மானத்தைக் காப்பாற்ற இன்னும் கொஞ்சம் விலையை உயர்த்துங்கள் என்று சுப்பி அவருக்குத் தெரிவிக்கிறார்

அதைத் தொடர்ந்து மீண்டும் அனுப்பப்பட்ட டெலக்சில் சுப்பி உடனே புறப்பட்டு, 22 அன்று இரவு பல்கேரியாவுக்கு வருவதாகவும், மிஸ்டர் 'பி' என்பவர் யாருக்கும் தெரியாமல் அவரை சந்தித்து, ஒரு பிரைவேட் விவாதம், விமான நிலையத்திலோ, ஓட்டலிலோ நடத்தப்பட வேண்டும் என்று குறிப்பிடுகிறார். இது தமிழ்நாட்டிலிருந்து செல்லுகின்ற அதிகாரிகளுக்குத் தெரியாமல் நடக்க வேண்டும் என்பதுதான் அதற்கு அர்த்தம். அப்படிக் கொடுக்கப்பட்ட டெலக்சுக்கு ஆதாரம் நம்பர் 9.

அதே 20-3-1979-ல் சுப்பி மூலம் அனுப்பப்படுகிற இன்னொரு டெலக்சில் திடுக்கிடத்தக்க வாசகங்கள் அமைந்து உள்ளன. ஊழலின் பாணி மர்ம பாஷையில் இங்கே பேசப்படுகிறது.

That friends will not agree to doing certain adjustment basis future deals, etc.

அதாவது நண்பர்கள் எதிர்கால பேரங்களில் அட்ஜெஸ்ட். செய்ய ஒத்துக் கொள்ள மாட்டார்கள். அந்த நண்பர்கள் யார் தெரிகிறது அல்லவா? நான் முதலிலே சொன்ன அந்தக் குழு, கமிஷன் வாங்குகிற குழு. முதலமைச்சர் உள்ளிட்ட, சுப்பி குழு உள்ளிட்ட, சித்ரா கிருஷ்ணசாமி உள்ளிட்ட அந்தக் குழு.

That friends will not agree to doing certain adjustment basis ofture deals, etc.
என்று குறிப்பிடுகிறார்

Friends-they prefer to finalise everything- எவ்ரிதிங் என்றால் சம்திங் they prefer to finaltise everything now and once Mr. P. ucnfirms to you the best

1979 நவம்பர் 3] [திரு. மு. கருணாநிதி]

அதாவது இப்பொழுதே பேரம் முடிந்தாக வேண்டும் அடுத்தது டீம்ஹெட், டீம் ஹெட் என்றால் அதிகாரிகளுடைய குழு தலைவர் வருகிறார்.''

Team Head will be authorised by Tamil Nadu Government as an order to increase by .1, but Mr. P. must stick to it, not melt as he did last time.

அவர் கம்யூனிஸ்ட் நாட்டிலே இருப்பவர், அந்த பி. என்பவர். ஆக இப்படிப்பட்ட விஷயங்களுக்கு ஈடு கொடுக்கவோ அல்லது வளைந்துக் கொடுக்கவோ முடியாத ஒருவர். ஆனால் அவர் எங்கே வளைந்துக் கொடுத்து விடப்போகிறாரோ, விலையை குறைப்பதற்கு என்ற கவலை சுப்பிக்கு ஏற்படுகிறது. இதனால் சொல்கிறார்.

Team Head will be authorised by Tamil Nadu Government as an order to increased by .1, but Mr. P. must stick to i —

.1 மில்லியடீ டாலர் அதிக விலைக்கு மிஸ்டர் 'பி' பல்கேரிய கப்பல் அதிகாரி ஸ்டிரிக்டாக இருக்க வேண்டும். வளைந்து கொடுத்து விடக் கூடாது.

not melt as he did last time

அந்த பாயின்ட் 1 மில்லியன் டாலர் விலைக்கே தமிழ்நாடு அரசு உத்தரவு கொடுக்கும். ஆனால் 'பி' ஸ்டாண்டர்டாக, ஸ்டிரிக்டாக இருக்க வேண்டும். சென்ற முறை போல் மனம் இளகி விடக் கூடாது என்பதற்கான மொழி பெயர்ப்பு கடிதம் இது. அந்த டெலக்ஸ்ஸுக்கான ஆதாரமாக இந்தக் கடிதத்தை 10 வது தாக வைக்கிறேன்.

அதற்குப் பிறகு 13.1க்குப் பதிலாக 13.2 இருந்தாலும் கொடுக்கலாம் என்று முதலமைச்சர் பாங்கோவிற்கு இன்னொரு அனுமதி கொடுக்கிறார். 13.1 என்பது நிர்ணயிக்கப்பட்ட விலை. அந்த விலையை வைத்து விடலாம் என்று பேசி பிறகு 13.2 டாலர் கூட தரலாம் என்று பாங்கோவிற்கு அனுமதி கொடுக்கிறார். அதற்கு என்ன ஆதாரம். திரு. பாங்கோ உயிரோடு இல்லாவிட்டாலும் ஒரு டெலக்ஸ் சாட்சி சொல்கிறது.

''Please treat this strictly confidential and do not divulge to Mr. P. the fact that Tamil Nadu Government have authorised the Team Head to sign the contract, if necessary at 11.2 million dollars. But for the time being please play it cool with Mr. P. until I get an opportunity to talk to him. By any chance, if my arrival is delayed due to reasons beyoned control Mr.P. should continue to maintain the price is 13.2 and he should not sign contract till I see him- This is of profound importance. Please do not miss o this.',

[திரு. மு. கருணாநிதி] [1979 நவம்பர் 3

இந்த டெலக்ஸை 1 வது ஆதாரமாக வைக்கிறேன். இந்த டெலக்ஸ்படி எவ்ரிதிங் அதாவது சம்திங் முடிந்து விடுகிறது. 1 கோடி ரூபாய்க்கு பேசப்பட்டு முன் பணம் கொடுக்கப்பட்டு விடுகிறது.

இந்த நிலையில் தமிழ்நாடு அரசு அதிகாரிகளுடைய தூது குழு பல்கேரியா சென்று அடைகிறது. இந்த சம்பவங்கள் எதுவும் அவர்களுக்குத் தெரியாது. இடையிலே நடைபெற்ற பேரங்கள். சுப்பி, சித்ரா கிருஷ்ணசாமி குழு நடத்திய பேரங்கள் எல்லாம் தமிழகத்திலிருந்து சென்றிருக்கிற அதிகாரிகளுக்குத் தெரியாது. மிஸ்டர் 'பி' என்று சொல்லப்படுகிற மர்மமான பெயர், அந்த மிஸடர் 'பி' பல்கேரியா கப்பல் கம்பெனியில் கையெழுத்திடும் அதிகாரி. அவரோடு இவர்கள் பேசியிருக்கிறார்கள். ஏற்கெனவே மனம் இளக கூடியவர் என்று சுப்பியே சொல்லியிருக்கிறாரே, அவரோடு அதிகாரிகள் கலந்து பேசி இன்னும் கொஞ்சம் குறைக்கச் சொல்ல கேட்டிருக்கிறார்கள், என்றாலும் 3 கப்பல்களுக்கும் 39 மில்லியன் டாலர் என்ற அளவுக்குப் பேசி முடித்து ஒப்பந்தத்திலும் கையெழுத்து இடப்படுகிறது. அங்கேதான் பராக்கிரமமான ராமகிருஷ்ணன் வருகிறார். திரு. ராமகிருஷ்ணன் ஐ. ஏ. எஸ். அவர்கள் கையெழுத்து இடுகிறார். திரு. பாங்கோ சாட்சி கையெழுத்து இடுகிறார். திரு. அனந்தராமன் கையெழுத்து இடுகிறார். ஒப்பந்தம் 24–3–1979ல் கையெழுத்து ஆகிறது. ஒப்பந்தம் கையெழுத்தானதிற்கு 11-ஏ என்கிற இந்த கடிதத்தை ஆதாரமாக வைக்கிறேன்.

ஒப்பந்தம் கையெழுத்து ஆன பிறகு அதிகாரிகள் தங்கியிருந்த ஓட்டலிலேயே தான் சுப்பி கோஷ்டியாரும் தங்கியிருந்தார்கள். இந்த சுப்பி கோஷ்டியாருக்கு முன்பு அதிகாரிகள் அந்த ஒட்டலுக்குப் போகிறார்கள். ''எனி மெசேஜ்'' ஏதாவது செய்தி உண்டா என்று ஒட்டல் ரிசப்ஷனிஸ்டிடம் கேட்கிறார்கள். அந்த ரிசப்ஷனிஸ்டுக்கு ஆங்கிலம் தெரியாது. அங்கே இருந்த டெலக்ஸ்களை எல்லாம் எடுத்து, இவர்கள் எல்லோரும் ஒரே குழுவினர் தானே என்ற கருத்தில் அங்கே இருந்த அதிகாரிகளிடத்தில் டெலக்ஸ் மெசேஜ்களை கொடுக்கிறார். அவைகளைப் பார்த்ததும் அதிகாரிகள் அதிர்ச்சி அடைகிறார்கள். ஏனென்றால் அந்த டெலக்ஸ மெசேஜில் அவர்கள் நிர்ணயித்து முடித்திருக்கிற பேரங்களுக்கும், பேசப்பட்ட பேரங்களுக்கும், டெலக்ஸில் இருந்த விவரங்களுக்கும் பல்வேறு வேறுபாடுகள் இருந்தன. உடனே அவர்கள் பல்கேரிய கப்பல் கம்பெனி அதிகாரிகளிடத்தில் ஓடிச் சென்று விஷயங்களை விவரிக்கிறார்கள்.

[முற்பகல் 11.50]

இது ஜப்பான் நாட்டு விமான ஊழல்போல் ஆகிவிடக்கூடாது இது உலக பிரசித்தியாகிவிடும், நீங்கள் கம்யூனிஸ்ட் கட்சி ஆளும் ஒரு நாட்டைச் சேர்ந்தவர்கள். உங்களை சுப்பி

கம்பெனியார் ஏமாற்றி இருக்கிறார்கள் என்ற உண்மையை நம் அதிகாரிகள் அவர்களுக்குச் சொல்லியிருக்கிறார்கள். அந்தக் கம்பெனியின் தலைமை அதிகாரி தமிழ்நாடு அதிகாரி ஒருவருக்கு மிஸ்டர் ராமகிருஷ்ணன் அவர்களுக்கு ஒரு கடிதம் எழுதுகிறார்.

'Strictly private and confidential'

என்று எழுதுகிறார். எங்கே? அங்கே, இங்கல்ல. பல்கேரியாவில் அந்தக் கடிதம் எழுதப்படுகிறது. அதில் எழுதுகிறார் அந்த அதிகாரி திரு. ராமகிருஷ்ணன் ஐ. ஏ. எஸ். க்கு.

'The terms of our agreement with the broker are generally kept highly confidential. I thereupon request you to consider this letter as strictly private and confidential. We have separately issued another open letter which can be considered an addition to the Ship Building Contract signed by us on 24th March 1979.'

இப்படி இடைத்தரகர்களிடத்தில் செய்து கொள்ளக்கூடிய ஒப்பந்தங்களில் மிக உயர்மட்ட இரகசியங்கள் அடங்கியிருக்கக் கூடும். இருந்தால்கூட நாங்கள் 24ம் தேதி செய்து கொண்ட ஒப்பந்தத்தையொட்டி தொடர்பான ஒரு ஒப்பந்தம் செய்து கொள்ள உங்களோடு முன்வருகிறோம். எனவே அதற்காக ஒரு ஒப்பன் லெட்டர் எழுதுகிறோம் என்று இந்த இரகசிய லெட்டரை எழுகிறார். அதற்கு இந்த ஆதாரம், இந்த இரகசிய லெட்டரைத் தொடர்ந்து ஒப்பன் லெட்டர் வருகிறது. அந்த ஒப்பன் லெட்டரில் — திரு. கே. எஸ்.. ராமகிருஷ்ணனுக்கு எழுதப்பட்டதுதான்— — கிட்டத்தட்ட ஒன்றரைக் கோடி ரூபாய் அளவிற்கு விலை குறைக்கப்படுகிறது. அது, குறைக்கப்பட்ட விலை என்றும் சொல்லலாம், அல்லது தவிர்க்கப்பட்ட கொள்ளை என்றும் கூறலாம். அந்த அளவிற்கு அதிகாரிகள் நேர்மையாக நடந்து கொண்டு அங்கிருந்த மேலதிகாரிகளிடம் பேசியதன் காரணமாக, இரகசிய லெட்டர் ஒன்றை எழுதிவிட்டு, இடைத்தரகர்கள் செய்துவிட்டார்கள் என்பதை கூறிவிட்டு ஒப்பன் லெட்டர் மூலமாக அந்த ஒப்பந்தத்திற்கு தொடர்பான ஒரு ஒப்பந்தத்தை செய்துகொண்டு அந்த ஒப்பந்தப்படி ஒன்றரைக் கோடி ரூபாய் குறைக்கப்படுகிறது. ஒப்பந்தத்தை முடித்துக் கொண்டு அதிகாரிகள் தமிழகத்திற்கு ஜாம் ஜாம் என்று திரும்புகிறார்கள். முதல் அமைச்சர் அவர்கள் பாராட்டுவார் போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்கள் பாராட்டுவார் இப்படி அதிக விலை கொடுக்காமல் வந்து விட்டோமே என்று. ஆனால் அவர்கள் பாராட்டப்படவில்லை. கண்டிக்கப்படுகிறார்கள். ஒரு அதிகாரி மீது பைலே தூக்கி வீசப்படுகிறது. அந்தளவிற்கு அதிகாரிகள் கண்டிக்கப்படுகிறார்கள். ஒரு அதிகாரி இறந்து கூட போய் விடுகிறார். திரு. பாங்கோ இறந்துகூட போய் விடுகிறார். 10·75 மில்லியன் டாலரிலிருந்து— — —13 மில்லியன்

டாலருக்கு ஒத்துக்கொண்ட அரசு அதை விட அதிகாரிகள் குறைந்து முயற்சித்து ஒரு முடிவு செய்து கொண்டு வந்த பிறகு, அரசாங்கத்தினிடம் அனுமதி கேட்ட பிறகு மத்திய அரசாங்கத்திற்கு 13 கோடி ரூபாய்க்கு அதை வாங்கவேண்டுமென்று அங்கீகாரம் கோரி கடிதம் எழுதப்பட்ட பிறகு 7-5-79 அன்று அமைச்சரவை மீண்டும் கூடி ஒரு முடிவு எடுக்கிறது. கப்பல்கள் வாங்கலாம் என்று ஒப்பந்தத்தில் கையெழுத்து போட்டுவிட்டும் வந்த பிறகு 7-5-79-ல் அமைச்சரவை கூடுகிறது. அந்தக் கப்பல்களை உடனே வாங்கி விட வேண்டும் என்றா முடிவு? இல்லை, இல்லவே இல்லை. டெல்லியிலுள்ள ஷிப்பிங் டெவலப்மென்ட் பண்ட் கமிட்டி இதற்கான அங்கீகாரம் வழங்குவதை ஒத்திபோடலாம் என்று பூம்புகார் கார்ப்பரேஷன் மூலம் தெரிவிக்கச் சொல்லி அமைச்சரவை முடிவு எடுக்கிறது. உடனடியாக அனுமதி கொடுத்து விடாதீர்கள் என்று—அனுமதி கேட்டு எழுதிய அரசு—டெல்லி ஷிப்பிங் டெவலப்மெண்ட் பண்ட் கமிட்டிக்கு நீங்கள் இந்தக் கப்பல்கள் வாங்குவதற்கு உண்டான அங்கீகாரம் வழங்குவதை ஒத்திபோடலாம் என்று பூம்புகார் கார்ப்பரேஷன் மூலமாகத் தெரிவிக்கச் சொல்லி அமைச்சரவை முடிவு எடுக்கிறது. வேறு ஒரு கம்பெனி இதை விட குறைவான மனுவினை தந்திருப்பதாகவும் அதனால்தான் அங்கீகாரம் வழங்குவதை ஒத்திப்போடலாம் என்று காரணம் கூறப்படுகிறது. பூம்புகார் கார்ப்பரேஷன் டெல்லியில் உள்ள ஷிப்பிங் டெவலப்மெண்ட் பண்ட் கமிட்டிக்கு அனுமதி வழங்குவதை ஒத்தி வைக்க வேண்டும் என்று கோரி எழுதுகிறது. உண்மையில் அமைச்சரவை எடுத்த முடிவின்படி ஒரு 'ஆபர்' வேறு கம்பெனியிடமிருந்து வந்ததா? பல்கேரியா கப்பல்களை வாங்கத்தேவை இல்லை என்று அமைச்சரவை முடிவு எடுத்து இப்போது அனுமதி வழங்க வேண்டாம் என்று டெல்லியில் உள்ள அந்தக் கமிட்டிக்கு கடிதம் எழுதச் சொல்லி பூம்புகார் கார்ப்பரேஷன் மூலம் பரிந்துரை செய்தார்களா? வேறு ஒரு இன்னும் குறைந்த 'ஆபர்' ஒன்று வந்திருக்கிறது என்று சொன்னார்களே, அப்படிப்பட்ட 'ஆபர்' வந்ததா, இல்லை. வந்திருந்தாலும் அது பல்கேரியா கம்பெனி ஆபரை விட குறைந்ததா இல்லை. அதற்கு நான் பதில் சொல்லத் தேவையில்லை. மானேஜிங் டயரக்டர் திரு. கே. எஸ். இராமகிருஷ்ணன் ஐ.ஏ.எஸ் அவர்களே பதில் சொல்லியிருக்கிறார்கள். இதன் மூலம்தான் மோசடியின் முழு விவரங்கள் தெளிவாகிறது. மெக்கனைஸ் ஆன்ட் மெக்கன்ஸி, பல்கேரியா கப்பல் கம்பெனி ப்ரோக்கர்ஸ், சித்ரா கிருஷ்ணசாமி,——சுப்பி அந்தப் பேரம் முடிகிற வரையில் அந்தக் கம்பெனியில் சீனியர் எக்ஸிக்யுட்டீவ்—ஆக பணியாற்றினார். தமிழ்நாடு அதிகாரிகளால் மேலும் ஒன்றரைக் கோடி ரூபாய் கொள்ளை தடுக்கப்பட்டதும் அந்தக் கம்பெனி பொறுப்பிலிருந்து சுப்பி விலகி விடுகிறார். நெப்ட்யூன் சார்ட்டேர்ஸ் (ப்ரைவேட்) லிமிடெட் என்ற புதிய கம்பனியைத் தொடங்குகிறார். 'ப்ளாட்லைன்ஸ்'—— ப்ளாட்லைன்ஸா

ப்ராட்லைன்ஸா ' எனக்குத் தெரியாது. அந்தக் கம்பெனியோடு உறவு கொள்கிறார். அதுவும் அண்மையில் தொடங்கப்பட்ட புதிய கம்பெனி. 7-5-79 அன்று அமைச்சரவை கூட்டம் கூடி தீர்மானம் நிறைவேற்றியதல்லவா, அன்று காலை அதே சுப்பி என்ற சுப்பிரமணியத்தால் போலந்து நாட்டில் தயாராகும் கப்பல் பற்றி ஒரு 'ஆபர்' தரப்படுகிறது. 'ஆபர்' வந்ததும் வராததும் இராமகிருஷ்ணன் லேசுப்பட்டவர் அல்ல— —வந்தவுடனே அந்த 'ஆபரை' பரிசீலிக்கிறார்.

பரிசீலனையில் தவறான தகவல் பல தரப்பட்டிருப்பதாக அறியப்படுகிறது. அந்தப் பரிசீலனையின் படி சுப்பி சொல்லுகிற போலந்து கப்பல்களை வாங்கினால் ஆண்டுதோறும் தமிழ்நாடு மின்வாரியத்திற்கு ஒன்றரை கோடி ரூபாய் நஷ்டம் வரும் என்று கண்டுபிடித்து ராமகிருஷ்ணனால் சொல்லப்பட்டிருக்கிறது. இந்தச் செய்தி எப்படியோ சுப்பிக்கு தெரிந்து விடுகிறது. சித்ரா இருக்கிறாரே, தெரியாதா? சித்ரா மூலம் தெரிகிறது. சித்ரா கிருஷ்ணசாமி மூலம் தெரிந்தவுடன் அமைச்சரவை கூடுவதற்கு அரை மணி நேரத்திற்கு முன்பாக இன்னொரு ஆஃபர் இதே சுப்பியால் தரப்படுகிறது. மாயமா? மந்திரமா? அமைச்சரவை கூடுவதற்கு முன்பு காலையில் ஒரு ஆஃபர். அந்த ஆஃபரை ஆராய்ச்சி செய்த ராமகிருஷ்ணன் ஐ.ஏ.எஸ். இது சரியான தகவல்கள் அல்ல என்று தெரிவித்திருக்கிறார். இந்தச் செய்தி சுப்பிக்குத் தெரிகிறது. தெரிந்த உடனேயே அமைச்சரவை கூடுவதற்கு அரை மணி நேரத்திற்கு முன்பாக இன்னொரு ஆஃபர் தரப்படுகிறது. பல்கேரியா கப்பலை விட அனுகூலமாக தயாரிக்கப்படுகிறது இந்த ஆஃபர். ஆனால் உண்மை நிலை என்ன? இது ஒரு போகஸ் ஆஃபர். இதை நான் சொல்லவில்லை. பூம்புகார் கார்ப்பரேஷன் மானேஜிங் டைரக்டர் ஐ. ஏ. எஸ்., அதிகாரி ராமகிருஷ்ணன் சொல்லுகிறார். அந்தக் கடிதத்தில் குறிப்பிடுகிறார்....

"I have no doubt whatsoever in my mind that the offer regarding the Polish vessel from Messrs. Flaudlines is a bogus one"

..என்று போகஸ் என்று குறிப்பிடுகிறார், மேலும் மனம் நொந்து எழுதுகிறார்....

'Even though as the Managing Director of the Poompuhar Shipping Corporation, I am bound to send the message to the Shipping Development Fund Commitee, as desired by the Cabinet. I would like this letter of mine to be on record as having been given before the unfortunate and irrevocable step was taken.''

அவர் எழுதுகிறார் பூம்புகார் கார்ப்பரேஷன் மானேஜிங் டைரக்டர் என்ற முறையில் நான் எஸ்.டி.எப்.ஸிக்கு. [S.D.F.C] டெல்லிக்கு அமைச்சரவையின் முடிவை தெரிவிக்க கடமைப்பட்டவனாக

இருந்தாலும் இந்தத் துர்பாக்கியமானதும், மாற்ற இயலாததுமான இந்த நடவடிக்கை எடுப்பதற்கு முன்பு இந்தக் கடிதத்தை பதிவு செய்ய விரும்புகிறேன். இது அப்போது தலைமைச் செயலாளராக இருந்த பணிக்கருக்கு எழுதப்பட்ட கடிதம்: 7ஆம் தேதி எழுதப்பட்ட கடிதம். இந்தக் கடிதத்திற்குப் பிறகு அரசாங்கம் தன்னுடைய மனதை மாற்றிக் கொள்வதாக இல்லை. பிறகு 9-ஆம் தேதி ஒரு கடிதம் எழுதுகிறார். அந்தக் கடிதத்தில் சுப்பியால் சொல்லப்படுகின்ற கம்பெனிகள் அவ்வளவும் போகஸ் மோசடியானவை என்பதையெல்லாம் குறிப்பிட்டுவிட்டு அப்படிப் பட்ட போலந்து கப்பல்களே இருக்கின்றனவா என்கின்ற சந்தேகம் இருக்கிறது. அந்தக் கப்பலும் இல்லை. விற்பனை செய்கின்ற கம்பெனியும் இல்லை என்று சுட்டிக்காட்டப்படுகிறது. அப்படியானால், அந்த போலந்து கப்பல்களை உள்ளே திணிப்பானேன்? அதற்கும் ராமகிருஷ்ணன், மானேஜிங் டைரக்டர் பூம்புகார் கார்ப்பரேஷன். எழுதுகிறார்....

'It is now clear that the offer of the Polish vessels was only an attempt to scuttle the bulgarian deal which had been entered in to in pursuance of the Cabinet decision'.

மீண்டும் படிக்கிறேன்....

'It is now clear that the offer of the Polish Vessels was only an attempt to scuttle the bulgarian deal which had been entered into in pursuance of the Cabinet decision'.

அமைச்சரவை முடிவுப்படி ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்ட பல்கேரிய வ்யாபாரத்தை ஒழித்துக் கட்டவே போலந்து நாட்டுக் கப்பல் ஆஃபர் தரப்படுகிறது என்பதில் சந்தேகம் இல்லை என்று ராமகிருஷ்ணன் பணிக்கருக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டிருக்கிறார். அதற்கான ஆதாரம், 13, 14, 15, 16, 17, ஆகிய கடிதங்கள். ராமகிருஷ்ணன் எழுதிய கடிதங்களை இங்கே வைத்திருக்கிறேன். அமைச்சரவையின் முடிவுப்படி பூம்புகார் கார்ப்பரேஷன் தந்திக்கு மத்திய அரசு என்ன செய்தது தெரியுமா? எதிலுமே துரிதமாக வேலை செய்யாத மத்திய அரசு இந்த விஷயத்தில் துரிதமாகச் செயல் பட்டது. அதில் பல்கேரியா கப்பலை வாங்கலாம், இவர்கள் வாங்க வேண்டாமென்று பூம்புகார் கார்ப்பரேஷன் மூலமாகத் தந்தி கொடுக்கிறார்கள். ஆனால், மத்திய அரசு பல்கேரியா கப்பலை வாங்கலாம் என்று பூம்புகார் கார்ப்பரேஷனுக்கு 8-5-79—ம் தேதியன்று அனுமதி கொடுத்திருக்கிறது. இந்த நிலையில் இவ்வளவு உண்மைகளையும் எடுத்துச் சொல்லி, இதில் போகஸ், ப்ராட் இவைகள் எல்லாம் நடைபெறுகின்றது. இந்த சுப்பி கோரிய திட்டங்களை எல்லாம் தள்ளிப்போட்டு, இத்தனையையும் வெளிச்சத்திற்குக் கொண்டு வந்த ராமகிருஷ்ணனுக்கு தரப்படுகின்ற பரிசு என்ன தெரியுமா? மானேஜிங் டைரக்டர்

பதவியிலிருந்து மாற்றப்படுகிறார், நல்ல காரியங்களை செய்தார் என்று இந்த அரசு நம்பியிருந்தால் இவர் உண்மையை அமல் படுத்தினார் என்று இந்த அரசு கருதியிருந்தால், பதவி உயர்வு கொடுக்காவிட்டாலும், இதே பணியில் தொடர்ந்து அவர் இருப்பாரேயானால் நேர்மையான காரியங்களை செய்யமுடியும் என்று கருதி அவரை வைத்திருக்கவேண்டும். ஆனால் அவர் பதவியிலிருந்து மாற்றப்படுகிறார். வேறு பொறுப்பும் கொடுக்கப்படவில்லை. எதுவுமில்லாமல் நிற்கிறார். பிறகு அந்த அதிகாரிக்கு மத்திய அரசு வேலை கொடுப்பதாக செய்தி வருகிறது. டெல்லிக்குச் சென்றால் பல குட்டுகள் உடைந்து விடும் அல்லவா? எனவே அவருடைய சேவை தமிழ் நாட்டுக்குத் தேவை. அவருக்கு தவிர்க்க முடியாத பணி இங்கே இருக்கிறது. ஆகவே மத்திய அரசுக்கு அனுப்ப இயலாது என்று தமிழ்நாட்டில் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த தவிர்க்க முடியாத பணி என்ன தெரியுமா? பெரிய பதவி, அடிஷனல் செக்ரட்டரி ஃபார் சோஷியல் வெல்பேர். பூம்புகார் கார்ப்பரேஷனுடைய மானேஜிங் டைரக்டராக இருந்தவருக்கு தவிர்க்க இயலாத பணி இங்கேயிருக்கிறது என்று சொல்லி, இப்போது தரப்பட்டிருக்கிற வேலை அடிஷனல் செக்ரட்டரி ஃபார் சோஷியல் வெல்பேர் என்ற வேலை. இன்னும் அந்த வேலையில் போய் சேராமல் இன்னும் பொறுப்பை ஏற்றுக்கொள்ளாமல் ராமகிருஷ்ணன் ஐ.ஏ.எஸ், லீவில் இருந்து வருகிறார் என்பதை எடுத்துக் காட்ட விரும்புகிறேன்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY LIBRARY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[நண்பகல் 12—00]

இதற்கிடையில், பல்கேரியாவிலிருந்து பல கடிதங்கள் வருகின்றன. ஒவ்வொரு கடிதத்திலும், ஏன் இன்னும் வாங்கிக் கொள்ளவில்லை, கப்பல்கள் வந்திருக்கின்றன. ஒப்பந்தப்படி வாங்கிக் கொள்ளுங்கள் என்று பல கடிதங்கள் வந்து கொண்டு இருக்கின்றன. ஜனவரியிலே ஆரம்பித்த வியாபார பேரம், இன்னமும் கடிதப் போக்குவரத்திலேயே இருக்கிறதே ஒழிய கப்பல்கள் வாங்கவில்லை.

''14-5-79க்குள் முடிவு தெரியாவிட்டால், மேற்கொண்டு நடவடிக்கைக்கு எங்கள் அரசாங்கத்திடம் எல்லா தஸ்தாவேஜுகளையும் தந்து விடுவோம்'' என்று பல்கேரியா நிறுவனம் எழுதுகிறார்கள். கம்யூனிஸ்ட் அரசாக இருக்கிற காரணத்தால், பல்கேரியா நிறுவனம் தமிழக அரசுக்கு இவ்வாறு எழுதுகிறார்கள். ''14-5-79க்குள் முடிவு தெரியாவிட்டால், மேற்கொண்டு நடவடிக்கை எடுக்க அரசாங்கத்திடம் எல்லா தஸ்தாவேஜுகளையும் ஒப்படைத்து விடுவோம்'' என்று பல்கேரியா நிறுவனம் எழுதிய பிறகு, 15-5-79 அன்று பூம்புகார் ஷிப்பிங் கார்ப்பரேஷன் பதில் அனுப்புகிறது. என்ன பதில்? 'எங்கள் அரசாங்கத்தின் தொடர்

புடைய அதிகாரி பாங்கோ காலமாகி விட்டார், அதனால் முன்னால் பரிசீலனை செய்ய முடியாமல் போய்விட்டது' என்று. பாங்கோ காலமாகிவிட்டார் என்பதற்கும், இந்த ஒப்பந்தத்திற்கும் என்ன சம்பந்தம்? ஏதோ ஜனாதிபதி இறந்து விட்டதைப் போல. கப்பலை வாங்காமற் போனதற்குக் காரணம், பாங்கோ காலமாகி விட்டார் என்றும், அதனால் உடனடியாக காரியம் செய்ய முடியவில்லை என்றும் அந்தக் கடிதத்திலே எழுதுகிறார்கள்.

பல்கேரியா நிறுவனம் மீண்டும் டெலக்ஸ் கொடுக்கிறார்கள். 19-5-79ஆம் தேதிவரை ஒப்பந்தம் அமுலில் இருக்கிறது; அதற்குள் முதல் தவணையை கட்டி விடும்படி டெலக்ஸ் வருகிறது. அந்த நாளும் போய்விடுகிறது.

1979, மே 30ஆம் தேதி மீண்டும் ஒரு டெலக்ஸ் வருகிறது. ஒவ்வொரு கப்பலின் விலையிலும் 6% விலை உயர்த்துவோம், இதுவும் ஜூன் 6ஆம் தேதி வரை, அதற்குப் பிறகு மேலும் விலை உயரும் என்று தெரிவிக்கப்படுகின்றது. எவ்வளவு தெரியுமா? 13.534 மில்லியன் டாலர். இதைப் பார்க்கவேண்டும்: 10.5லிருந்து 10.15ஆகி, பின்னால் இது 13.1, 13.2 என்றும், பிறகு மேலும் விலை உயருகிறது. அதிகாரிகளின் திறமையால் விலை குறைக்கப்பட்டது; ஆனால் இவர்கள் காலம் கடத்தியதன் காரணமாக 13.534 மில்லியன் டாலருக்கு போகின்ற நிலைமை உருவாக்கப்படுகின்றது.

13-6-79 அன்று மீண்டும் ஒரு டெலக்ஸ் வருகின்றது. தாமதம் காரணமாக, எங்களுக்கு 5 லட்சம் நஷ்டம் ஏற்படுகிறது. இரு தரப்பிலும் இதற்காக பொதுப் பணத்தை செலவழித்துவிட்டோம். நாங்கள் முதல் தடவையாக இந்தியாவோடு வியாபாரம் செய்கின்ற வாய்ப்பைப் பெற்றிருக்கிறோம். இந்தியா, கம்யூனிஸ்ட் நாடுகளுக்கிடையே முதல் தடவையாக வியாபாரம் செய்யும் வாய்ப்பைப் பெற்றிருக்கிறோம். இந்த பேரம் குறித்து இந்தியாவிலும், பல்கேரியாவிலும் பொதுமக்கள் அதிகம் தெரிந்து வைத்திருக்கிறார்கள். இதை டெலக்சிலே சொல்லுகிறார்கள். இந்த பேரம் குறித்து இந்தியாவிலும், பல்கேரியாவிலும் பொதுமக்கள் அதிகம் தெரிந்து வைத்திருக்கிறார்கள். மேலும், இதிலே ஒப்பந்தமாகிவிட்டது. ஒப்பந்தமாகிவிட்டது என்றால், இதிலே மத்திய அரசும், பல்கேரிய அரசும் ஒப்புக்கொண்டு விட்டது என்பதாகும். முதல் தவணையை 19-6-79க்குள் செலுத்துங்கள் என்கிறார்கள். அதற்கு ஆதாரம், இதோ இந்தக்கடிதம். ஆனால், நிலைமை என்ன? 26-10-79 தேதியில் டெல்லியிலிருந்து, பூம்புகார் கார்ப்பரேஷனுக்கு கடிதம் வருகிறது. அதிலே,

'There are some reports that the Bulgarian Ship order has run into difficulties owing to a price increase demanded by the Bulgarian Authorities. Could you kindly let us know by telex whether these reports are correct.

என்று டெல்லி, மத்திய அரசின் ஷிப்பிங் அண்டு டிரானஸ் போர்டு இலாகாவிலே இருந்து பூம்புகார் கார்ப்பரேஷனுக்கு இப்போது ஒரு டெலக்ஸ் வந்திருக்கிறது. ஆக, இந்தக் கப்பலை வாங்கியிருந்தால், இந்நேரம் அந்தக் கப்பல் இங்கே வந்திருக்க முடியும். ஆனால், வாங்காமல் இருந்ததற்கு என்னக் காரணம்? 13.1, 13.2 என்றிருந்து, பிறகு அதனுடைய விலை $1\frac{1}{2}$ கோடி குறைக்கப்பட்டு விட்டதன் காரணமாக, கொள்ளை தடுக்கப் பட்டது என்ற அந்த் அளவிலேதான் இந்தக் கப்பல் வாங்கப் படாமல், கடைசியிலே மத்திய அரசாங்கத்திடமிருந்து கடிதம் வருகின்ற அளவிற்கு வந்திருக்கிறது.

'There are some reports that the Bulgarian Ship order has ruu into difficulties owing to a price increase demanded by the Bulgarian Authoraties. Could you kindly let us know by telex whether these reports are correct?

என்று கேட்கின்ற அளவிற்கு நிலைமை உருவாகியிருக்கின்றது. எனவே, இதுவரை இந்த கப்பல் வியாபாரத்தைச் செய்யாமல், இனிமேல் வாங்கப் போகிறோம் என்று சொன்னாலும்கூட, இந்த அக்டோபர் மாதம்வரை வாங்காமல் இருந்தது சரியல்ல.

அதன் காரணமாக அரசாங்கத்திற்கு ஏற்படுகின்ற நஷ்டம், வாடகைக் கப்பல்களில் நிலக்கரி கொண்டுவர பல்வேறு செலவுகள் இவைகளை எல்லாம் கணக்கிட்டுப் பார்க்கவேண்டும். தாங்கள் திட்டமிட்டபடி ஏறத்தாழ 4 கோடி ரூபாய் தங்களுக்குக் கிடைக்க வேண்டிய கமிஷன் — பச்சையாகச் சொல்ல வேண்டு மானால் லஞ்சம் — அது கிடைக்கவில்லை என்ற காரணத்திற்காக இந்த அளவுக்கு இந்த கப்பல் பேரத்தில் இவ்வளவு விளை யாட்டுக்களை விளையாடி இருக்கிறார்கள். நான் முதலமைச் சரையும் சேர்த்துக் குற்றம் சாட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். விலையை உயர்த்தி கொள்ளையடிக்க சதி நடத்தப்பட்டது. அந்நியச் செலாவணி மீறல் என்கிற அளவுக்குக் கூட சட்டத்தை மீறுகிற முயற்சிகள் நடைபெற்றிருக்கின்றன. பல்கேரியாவில் இதற்குப் பெயர் — அட்ரஸ் கமிஷன் என்ற செல்லப் பெயரை வைத்திருக்கிறார்கள். பல்கேரியாவில் அட்ரஸ் கமிஷன் என்று வைத்திருக்கிறார்கள். இந்தியாவில் 22 மாநிலங்களில் இதுவரை நடைபெறாத மகா பெரிய ஊழல், இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற ஊழல் — அந்த இணையற்ற ஊழலை நடத்திக் காட்டிய நம்முடைய முதலமைச்சர் எம்.ஜி.ஆர். தான் என்னைப் பார்த்து 'ஊழலின் மொத்த உருவம்' என்று புதுக்கோட்டையில் பேசியதாக நான் கேள்விப்படுகிறேன். நாங்கள் இதை வாங்கு

கிறோம் என்று சொன்னாலும், அதே விலைக்கு வாங்கினாலும் இந்த நான்கு கோடி ரூபாய் கமிஷன் உங்களுக்குக் கிடைக்க இருக்கிறது. வாங்காவிட்டாலும் பெரிய செலவு. தேவையற்ற செலவு. நம்முடைய மக்கள் வரிப்பணத்தில் இருந்து ஆகியிருக்கிறது என்ற அந்தக் குற்றத்திலிருந்து நீங்கள் தப்ப முடியாது. ஆகவே, ஊழல், ஊழல் என்று எங்களைப் பார்த்துப் பேசுகிற நீங்கள் இன்றைக்கு கடைந்தெடுத்த, ஜமக்காளத்தில் வடிகட்டிய ஊழல் பேர்வழிகளாக இருக்கிறீர்கள் என்று இந்தக் கண்டனத் தீர்மானத்தில் எடுத்துக் கூறி அமர்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: மரியாதைக்குரிய மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தில் இந்த அமைச்சரவை மீது கண்டனத் தீர்மானம் கொண்டு வந்து முதல் முதலில் உரையாற்றிய பேராசிரியர், அந்தக் கட்சியின் துணைத் தலைவர் அன்பழகனார் அவர்களுக்கு நான் முதலில் நன்றி கூறக் கடமைப் பட்டிருக்கிறேன். காரணம், அவர்கள் தொடக்கத்தில் பேசத் தொடங்கியபோதே, ஏன் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்திருக்கக்கூடாது என்று கேட்டார்களானால், 'இந்த அமைச்சரவை நாங்கள் கூறுகிற கருத்துக்களைக் கவனித்து, அதைப் பரிசீலித்து திருந்தவும் திருத்திக் கொள்ளவும் நல்லதொரு வாய்ப்பைத் தரவேண்டுமென்ற நிலையில் இந்தப் பணியினை நான் தொடருகிறேன்' என்று சொல்வதுபோல் அந்தக் கருத்தை இங்கே வெளியிட்டிருக்கிறார்கள். முதலிலே அவர்களுக்கு அந்த நம்பிக்கையை வைத்திருப்பதற்காக நான் நன்றி கூறக் கடமைப் பட்டிருக்கிறேன்.

மேலும் அவர்கள் ஒட்டுமொத்தமாக இங்கே பேசியவைகளைப் பற்றியெல்லாம் கவனிக்கிற நேரத்தில் மற்றவர்கள் தனித் தனியாகப் பல கருத்துக்களைச் சொல்லியிருந்தாலும் அவர்கள் பொதுப்படையாகப் பல பிரச்சினைகளை முன்வைத்து இங்கே தங்கள் கருத்துக்களை எடுத்து வைத்துள்ளார்கள். அதிலே நான் மிகமிக உன்னிப்பாகக் கவனித்த பிரச்சனைகள் மிகப் பல உண்டு. கவனித்து என்று சொல்லும்போது மாமன்றத்திற்கு வராமல் உடல் நலம் இல்லாமல் இருந்த நீ எப்படி கவனித்திருக்க முடியும் என்ற கேள்வி தொக்கி நிற்கிறது. பேராசிரியர் சிரிக்கிறார். நான் நோய்வாய்ப்பட்டிருந்தபோதும் தொலைபேசி மூலமாக தொடர்புகொண்டு இங்கு பேசுகிற ஒவ்வொரு வார்த்தையும் கேட்டுக்கொண்டுதான் படுக்கையில் இருந்தபடி கவனித்தேன என்பதைச் சொல்ல விரும்புகிறேன்.

[பிற்பகல் 12–10]

உடல் நலம் இல்லை என்கின்ற காரணத்தைப் பற்றியும் அவர்கள் இங்கே சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் சொன்ன அந்தக்